பக்கங்கள்:-21

காலை முரசு

முழக்கம்: 01 | வள்ளுவர் ஆண்டு 2055 | தை 12 | வெள்ளிக்கிழமை | 26.01.2024 | அதிர்வு 178

## இளையராஜாவின் மகள் இலங்கையில் காலமானார்



(விரிவான செய்தி 10ஆம் பக்கத்தில்)

# அநுரவுக்குப் பயந்து தேர்தலை நடத்தப் பின்னடிக்கின்றது அரசு

## தேசிய மக்கள் சக்தி குற்றச்சாட்டு

(பாறுக் ஷிஹான்)

"இலங்கையின் புதிய ஜனாதிபதியாக எதிர்காலத்தில் அநுரகுமார திஸாநாயக்க வருவார் என்ற அச்சத்தில் அரசு ஜனாதிபதித் தேர்தலை நடத்தப் பின்னடிக்கின்றது. ஆனால், ஜனாதிபதித் தேர்தலைப் பிற்போட முடியாது."

- இவ்வாறு தேசிய தொழிற்சங்க சம்மேளனத்தின் தலைவரும் தேசிய மக்கள் சக்தியின் தேசிய செயற்குழு உறுப்பினருமாகிய கே.டி. லால் காந்த தெரிவித்தார். 06



# விபத்தில் உயிரிழந்த சனத்தின் இறுதிக்கிரியைகள் ஞாயிறன்று

## குடும்பத்தினருக்கு ரணில், மஹிந்த நேரில் அனுதாபம் தெரிவிப்பு







வாகன விபத்தில் உயிரிழந்த இராஜாங்க அமைச்சர் சனத் நிஷாந்தவின் இறுதிக்கிரியைகள் நாளைமறுதினம் நடைபெறவுள்ளன.

சிலாபம் – ஆராச்சிக்கட்டுவ ராஜக தலுவ தேவாலயத்தில், அன்றைய தினம் பிற்பகல் 2 மணியளவில் இறுதிக்கிரியைகள் இடம்பெறவுள்ளன.

இராஜாங்க அமைச்சர் சனத் நிஷாந்தவின் பூதவுடல், மக்கள் அஞ்சலிக்காகப் பொரளை ஜயரத்ன மலர்ச்சாலையில் நேற்று மாலை 5 மணி முதல் வைக்கப்பட்டுள்ளது.

அன்னாரின் பூதவுடல், 06

# சஜித்தின் கூட்டணியை உடைக்க ரணில் வியூகம்

## டலஸ் அணி குற்றச்சாட்டு



ஐக்கிய மக்கள் சக்தி தலைமையில் அமையவுள்ள கூட்டணியைச் சீர்குலைக்கும் முயற்சியில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க ஈடுபட்டுள்ளார் என்று சுதந்திர மக்கள் சபையின் நாடாளுமன்ற உறுப்பினர் கலாநிதி நாலக கொடஹேவா தெரிவித்தார். 06




இலங்கைத் தமிழரசுக் கட்சியின் 17 ஆவது தேசிய மாநாட்டின் முக்கிய அம்சம் – நிகழ்வு – நாளை நடைபெறப் போகின்றது.

தேசிய மாநாடு நாளை மறுதினம் ஞாயிற்றுக் கிழமை என்றாலும், கட்சியின் தலைவர் தவிர்ந்த ஏனைய நிர்வாகிகளைத் தேர்வு செய்வதற்கான பொதுக் குழுவின் கூட்டம் நாளைதான் திருகோணமலையில் நடைபெறப் போகின்றது. பொதுச்செயலாளர், சிரேஷ்ட 06




# கறுப்பு ஜனவரி நினைவேந்தல் யாழில்!

ஊடகவியலாளர்கள் கொல்லப்பட்டும், காணாமல் ஆக்கப் பட்டமைக்கும் நீதி கோரி "கறுப்பு ஜனவரி" நினைவேந்தலும் கலந்துரையாடலும் யாழ்ப்பாணத்தில் நேற்று நடைபெற்றது.

யாழ் ஊடக அமையத்தின் தலைமையில் சுதந்திர ஊடக இயக்கத்தின் பங்கெடுப்பில் இந்த நினைவேந்தல் மற்றும் கலந்துரையாடல் நேற்று மதியம் 2 மணியளவில் யாழ் நகரில் உள்ள தனியார் விடுதியில் நடைபெற்றது.

இதன்போது ஊடக சுதந்திரம், நிகழ்நிலைக் காப்புச் சட்டம், நிகழ்நிலை காப்புச் சட்டம் ஊடகங்களில் செலுத்தவுள்ள தாக்கம் தொடர்பாகவும் சட்டத்தரணி. ஊடகவியலாளர், துறை சார் நிபுணர்களின் உரையும் இடம்பெற்றது.

கொல்லப்பட்ட ஊடகவியலாளர்களுக்கு நீதிகோரி சுடரேற்றி அஞ்சலி செலுத்தப்பட்டது.

நினைவேந்தலில் ஊடகவியலாளர்கள், சிவில் சமூகப் பிரதிநிதிகள், அரசியல் பிரமுகர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

ஜனவரி மாதம், இலங்கையில் ஊடகத்துறையைப் பொறுத்த வரையில் கறைபடிந்த மாதமாகவே காணப்படுகிறது. பல்வேறு ஊடக நிறுவனங்கள் மீதான தாக்குதல்கள், ஊடகவியலாளர்கள் கொலை, ஊடகவியலாளர்கள் காணாமல் ஆக்கப்பட்டமை என்பவற்றுக்கு நீதி கோரி, வருடம் தோறும் ஜனவரி மாதத்தை 'கறுப்பு ஜனவரி'யாக கடைப்பிடிக்கப்பட்டு வருகின்றது.









# வவுனியாவில் ஔவையார் நினைவேந்தல்



(கி.வசந்தரூபன்)

வவுனியா சின்னப் புதுக்குளம், வெளிக்குளம் சந்தியிலுள்ள ஔவையார் நினைவுத் தூபியில் அவரது நினைவு தினம் நேற்று அனுஷ்டிக்கப்பட்டது.

வவுனியா நகரசபையின் ஏற்பாட்டில் நகரசபை செயலாளர் தயாபரன் தலைமையில் இந்த நிகழ்வு இடம்பெற்றது.

இதன்போது ஔவையாரின் திருவுருவசிலைக்கு மலர் மாலை அணிவிக்கப்பட்டு, மலர் அஞ்சலி செலுத்தப்பட்டதுடன், நினைவுப் பேருரையை இந்து கலாச்சார உத்தியோகத்தர் சிவகஜன் நிகழ்த்தினார்.

இந்நிகழ்வில் முன்னாள் நகரசபை உறுப்பினர்கள், முன்னாள் செட்டிகுளம் பிரதேச சபை தவிசாளர், தமிழ் விருட்சம் அமைப் பினர், நகரசபை உத்தியோகத்தர்கள், சமூக ஆர்வலர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.














# நாடு முழுவதிலும் ஏற்றுமதி வலயங்களை நிறுவி தேசிய பொருளாதாரத்தை மேம்படுத்த ஏற்பாடு

## ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தகவல்

“திறந்த பொருளாதாரத்தில் முழுமையாகப் பயனடையும் வகையில் நாடு முழுவதும் புதிய முதலீட்டு வலயங்களை உருவாக்கி, தேசிய பொருளாதாரத்தை பத்து மடங்கு மேம்படுத்த நடவடிக்கை எடுக்கப்படும்.”

– இவ்வாறு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

சபுகஸ்கந்த அபேசேகரராமவில் புதிதாக நிர்மாணிக்கப்பட்ட போதி மதில் மற்றும் தங்க வேலி திறப்பு நிகழ்வில் நேற்று கலந்து கொண்டபோதே ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இதன்போது அவர் மேலும் தெரிவிக்கையில் –

“அப்போது நாட்டின் பொருளாதாரம் வீழ்ச்சி அடைந்திருந்ததால் நான் நாட்டைப் பொறுப்பேற்றேன். மக்கள் வாழ்வாதரத்திற்கு வழி இருக்கவில்லை. எரிபொருள் மற்றும் எரிவாயு இருக்கவில்லை. அந்த நிலை தொடர்ந்தால் இந்த நாட்டின் இருப்பு கேள்விக்குரியாகிவிடும். எனவே, இந்த நாட்டைக் காப்பாற்றி பொருளாதாரத்தை கட்டியெழுப்ப வேண்டும் என்பதற்காகவும், அதனை செய்ய முடியும் என்ற நம்பிக்கை இருந்ததாலும் ஜனாதிபதி பொறுப்பை ஏற்றுக்கொண்டேன்.

இப்போது இரண்டு ஆண்டுகள் கடந்துவிட்டன. இன்று படிப்படியாக நாடு இயல்பு நிலைக்குத் திரும்பிகொண்டிருக்கிறது. இன்று தட்டுப்பாடுகள் இல்லை. ஆனால் பொருளாதாரத்தை மீளக் கட்டியெழுப்புவதில் ஏற்படும் பிரச்சினைகளை நாம் எதிர்கொள்ள வேண்டியிருக்கின்றது. தற்போது அந்த நிலையில் இருந்து படிப்படியாக முன்னேறி வருகிறோம்.

வங்குரோத்து நிலையில் இருந்த இலங்கையின் பொருளாதாரம் தற்போது மீண்டு வந்துள்ளதாக சுவிட்சர்லாந்து விஜயத்தின் போது உலகத் தலைவர்களிடம் தெரிவித்தேன். அவர்களில் பலர் இவ்வளவு குறுகிய காலத்தில் நாம் அடைந்திருக்கும் முன்னேற்றம் ஆச்சரியம் அளிப்பதாகத் தெரிவித்தனர்.

உலக வங்கியின் தலைவர் மற்றும் சர்வதேச நாணய நிதியத்தின் முகாமைத்துவப் பணிப்பாளருடன் கலந்துரையாடும் வாய்ப்பு எனக்குக் கிடைத்தது. நாங்கள் பொருளாதார ஸ்திரத்தன்மையை அடைந்துள்ளோம், ஆனால் எங்களின் வருமானம் போதுமானதாக இல்லை.





எனவே, நாட்டின் வருமானத்தை அதிகரிக்க வேண்டியுள்ளது. அதனால்தான், துரதிர்ஷ்டவசமாக, வற் வசூலிக்க வேண்டியேற்பட்டது. இப்போது நாம் எதிர்மறை பொருளாதாரத்திற்கு பதிலாக நேர்மறை பொருளாதாரத்தை நோக்கி நகர்கிறோம்.

புதிய தொழில்துறைகள் மற்றும் புதிய முதலீட்டு வாய்ப்புகளை உருவாக்கி மக்களுக்கு தொழில் வாய்ப்பை வழங்க வேண்டும். அதற்கான தகுந்த சூழலை உருவாக்கும் முயற்சியில் தற்போது ஈடுபட்டுள்ளோம். நாடு முழுவதும் பியகம முதலீட்டு வலயம் போன்ற முதலீட்டு வலயங்களை உருவாக்கி நாட்டின் பொருளாதார வேகத்தை பத்து மடங்கு அதிகரிக்க திட்டமிட்டுள்ளோம்.” – என்றார்.








Build Your Dream Home with us....
NORTH WALL
ENGINEERING
"Experience a professional service like no other"
Our Services:
Architectural Designing
Structural Planning
2D & 3D Drawing
BOQ Assessment
Interior Designing
Landscaping
For Quotations Contact us on
0777 818 208 / 0774 002 766
Nelliyady, Jaffna.


INDIA'S MAGIC STAR
MASTER MAGICIAN ★ LEADING ILLUSIONIST
SAC VASANTH
LIVE ON STAGE
MULTI-LANGUAGE SHOW
ENGLISH - HINDI - TAMIL - TELUGU
MALAYALAM - KANNADA
HE HAS ENTERTAINED MILLIONS OVER THE PAST 2 DECADES ALL OVER THE WORLD. HE DEFIES REALITY WITH MIND BLOWING ILLUSIONS, CONJURING. GROUP HYPNOSIS AND MUCH MORE!
WITH OVER 5000 LIVE SHOWS AND MANY TELEVISION PRODUCTIONS
MEET THE MAN
WHO PREDICTED GRAND MASTER OF CHESS GARRY KASPAROV'S NEXT MOVE
WHO CAN PREDICT YOUR FORTHCOMING RUBI'S CUBE MIXED PATTERN
WHO STIMULATED A TELEKINETIC CONNECT BETWEEN MS DHONI AND BRAVO
WHO HAS STUNNED CELEBRITIES ACROSS THE GLOBE
HE HAS PERFORMED ACROSS THE GLOBE. COUNTRIES INCLUDE USA, CANADA, JAPAN, CHINA, THAILAND, DUBAI, MALAYSIA, SINGAPORE AND MANY MORE. A SELF LEARNT ILLUSIONIST WHO TODAY INNOVATES AND CREATES NEW ILLUSIONS FROM EVERYDAY EXPERIENCES.
PERFORMED IN MAJOR WORLD FAMOUS TV CHANNELS & FEW HERE:
விஜய்
Discovery
BBC
FOX
ZEE TV
SONY
TICKETS
FOR FREE SPONSOR TICKETS
REGISTER AT BELOW LINK
tinyurl.com/mvk2024
VENUE: EASTDALE COLLEGIATE AND VOCATIONAL INSTITUTE, 265 HARMONY ROAD NORTH, OSHAWA, ON, L1G 6L4, CANADA
DATE: SATURDAY, JANUARY 27TH 2024
TIME: 7:00 PM TO 9:00 PM
BOOK HERE www.mvkevents.com

## இரகசியம் பரகசியம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

துணைத் தலைவர் உட்பட முக்கிய பதவிகளுக்குரிய நிர்வாகிகள் தெரிவு நாளை நடக்க உள்ளது.

கடந்த பொதுத் தேர்தலின் போது விடுதலைப் புலிகளுக்கு மதியுரைஞர் அன்ரன் பாலசிங்கம் போல தமிழரசுக்கு சுமந்திரன் என்று கருத்துரைத்தவர் சிறீதரன்.

ஆனால் கட்சியின் தலைவர் தேர்தலையொட்டி நடந்த பிரசாரங்களில் அதுவரை அன்ரன் பாலசிங்கமாக விளங்கிய சுமந்திரன் தமிழ் தேசிய விரோதியாக – கருணாவைப் போல – அடையாளப் படுத்தப்பட்டார். தமிழ் தேசியத்தின் தலைவராக சிறீதரன் உயர்த்தப்பட்டு விட்டார். இரண்டையும் தமிழரசுக் கட்சியே செய்தது.

ஆயினும், தலைவர் தேர்தல் முடிந்த பின்னரும், அதில் வென்ற சிறீதரனை உடனேயே வெளியே வந்து பகிரங்கமாக வாழ்த்தி, அவருடன் கையைத் தூக்கிப் பிடித்து, ஒன்றுபட்டுச் செயல்படுவோம் என்று உறுதியளித்து தனது Sportsmanship ஐ வெளிப்படுத்தினார் சுமந்திரன்.

இருவரும் ஒன்று பட்டு செயல்படுவதாயின் நிர்வாகிகள் தெரிவை இருவரும் கருத்துப் பரிமாறி மேற்கொள்ள வேண்டும். அப்படி ஏதும் நடந்ததாகவோ அல்லது நடக்கக் கூடியதாக இருக்கும் என்றோ தெரியவில்லை. தலைவர் தெரிவு நிகழ்வுக்குப் பின்னர் இருவரும் அது பற்றி உரையாடினர் என்று கூடத் தெரிய வரவில்லை.

எனவே கட்சியின் தலைவர் பதவியை ஏற்கப் போகும் சிறீதரன் தம் இஷ்டப்படி நிர்வாகிகள் தெரிவையும் முன்னெடுப்பார் என்றே தோன்றுகின்றது.

சிறீதரன் – சுமந்திரன் ஒன்று பட்டுச் செயல்படுவதற்கான வாய்ப்பு இல்லவே இல்லை என்று தலைவர் தெரிவு நடைபெற்ற உடனேயே குறிப்பிட்டு இருந்தேன். அதுவே உறுதியாகி வருகின்றது.

தமிழர் தேசியத்தை வலியுறுத்தல் என்ற பெயரில் கட்சித் தலைவர் சிறீதரனின் கருத்து நிலைப்பாட்டை நியாயப் படுத்த கூடிய கட்சிப் பேச்சாளர் ஒருவரையும் சிறீதரன் தெரிவு செய்ய வேண்டி இருக்கும்.

இப்போது கட்சியின் செயற்பாட்டாளர்களில் கட்சியில் சிரேஷ்ட நிலையில் இருப்பவர் இதுவரை கட்சியின் நிர்வாக செயலாளராக இருந்து வரும் குலநாயகம்தான். அவர் இம்முறை பொதுச் செயலாளர் பதவிக்கு போட்டியிடுவதில் உறுதியாக இருக்கின்றார் என்று தெரிகின்றது. ஏற்கனவே இரண்டு முறை இப் பதவிக்காக போட்டியிட முனைந்து, இணக்க ஏற்பாட்டுக்காகக் கட்சித்தலைமை கேட்டுக்கொண்டதன்பேரில்விட்டுக்கொடுத்தவர். இந்த முறை விட்டுக் கொடுக்கும் நிலைப்பாட்டில் அவர் இல்லை. ஆனால் அவருக்கு அதை விட்டுக் கொடுக்கும் நிலையில் சிறீதரன் அணியும் இல்லை என்று தெரிகிறது. ஆகவே பொதுச் செயலாளர் தெரிவுக்கு இணக்க நிலை வருவது துர்லபமே. அதுவும் தலைவர் தெரிவு போன்று தேர்தல் அடிப்படையிலேயே நடக்கும் எனத் தோன்றுகின்றது.

'பொதுக்குழுவாக்குகள்மூலம்என்னை நிராகரிக்கட்டும். நான் நீண்ட கட்சிச் சேவையை முடித்துக்கொண்டு வெளியேறுவேன்' என்ற நிலைப்பாட்டில் குலநாயகம் இருக்கின்றார் என்று தெரிகின்றது.

புதிய தலைமைப் பொறுப்பை ஏற்கப் போகும் சிறீதரனின் கட்சி அணுகுமுறைக்கு நாளைய கட்சி நிர்வாகிகள் தெரிவு ஓர் உரைகல். கட்சியை ஐக்கிய படுத்தி ஒரே சக்தியாக கொண்டு நடத்துவாரா அல்லது கன்னை பிரித்துப் போட்டுடைக்கப் போகின்றாரா என்பதை நாளையே எடை போடக் கூடியதாக இருக்கும் என்று கருதுகிறேன்.

+ + +

நமது ஊடகத்துறை தொடர்பில் மனதில் பட்ட ஒரு விடயத்தை குறிப்பிட விரும்புகிறேன்.

நான் ஊடகத் துறைக்கு வந்த காலத்தில் இருந்தே எந்த ஊடக சங்கத்திலோ அல்லது அமைப்பிலோ அங்கத்தவனாக இருந்தவன் அல்லன்.

1985 காலப் பகுதியிலே யாழ். குடா நாட்டைக் கட்டுப்படுத்திய பல்வேறு போராளி இயக்கங்களும் துறைசார் தரப்பினரை ஒழுங்குபடுத்தித் தங்கள் கண்காணிப்பில் வைத்திருப்பதற்காக அந்தந்தத் துறை சார்ந்த சங்கங்கள், அமைப்புகளை உருவாக்குவது வழமையாக இருந்தது. மினி பஸ் சங்கம், சலூன் உரிமையாளர்கள் சங்கம், லொறிப் போக்குவரத்து உரிமையாளர் சங்கம் என்று இந்த பட்டியல் நீண்டது.

அந்த வகையில் பத்திரிகையாளர்களைக் கட்டுப்படுத்துவதற்கு வசதியாக ஒரு பத்திரிகையாளர் சங்கத்தை உருவாக்கும் நோக்கில் புலிகளின் யாழ் அரசியல் பொறுப்பாளராக இருந்த திலீபன் (பின்னாளில் தியாகி திலீபன்) சில முயற்சிகளை முன்னெடுத்தார். அதில் கட்டுப்பட மாட்டோம் என்று அவருடன் முரண்டு பிடித்து, அந்தச் சங்கத்தில் இணையாமல் நாங்கள் இருந்தோம். அதே நிலைமையை இன்றுவரை தொடர்கின்றேன்.

ஆனால் வடக்கிலும், கிழக்கிலும், தேசிய ரீதியிலும் ஊடக ஊழியர்களின் – பணியாளர்களின் – அமைப்புகள் நடத்தும் நிகழ்ச்சிகள், போராட்டங்கள் அனைத்திலும் அழைப்பு கிடைத்தால் பங்கு பற்றுவேன். அவற்றைப் பற்றிய செய்திகளைத் தாராளமாகப் பிரசுரிப்பேன். அவற்றோடு சேர்ந்து இயங்குவேன்.

1985 லிருந்து 2009 வரை இருண்ட யுகத்துக்குள் துணிச்சலாக என்னோடு ஊடகத்துறையில் பயணித்த பலர் இன்னும் மண்ணில் இருக்கின்றார்கள். அந்த ஊடகப் பணியின் வலியை – நோவுகளை – மோசமான அனுபவங்களை – நேரடியாக எதிர் கொண்டவர்கள் நாங்கள். இறந்தவர்கள் போக இருப்பவர்கள் நாமே.

அந்த இருண்ட யுக நினைவேந்தலைப் போற்றும் நிகழ்வு ஒன்று யாழ்ப்பாணத்தில் நேற்று நடந்தது. நல்லது. யார் யாரையோ எல்லாம் அதன் நிழற்படங்களில் பார்த்தேன்.

உரிமை உள்ள எங்களைப் போன்றவர்களுக்கும் ஓர் அழைப்புத் தந்திருக்கலாம் – அந்தக் கசப்புணர்வு அனுபவங்களை நினைவூட்டி நிகழ்ச்சியாக்குவோர்...!

## சஜித்தின் கூட்டணியை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

இது தொடர்பில் ஊடகங்களிடம் அவர் மேலும் கூறியதாவது:–

"ஐக்கிய மக்கள் சக்தி ஆட்சியில் நான்தான் நிதி அமைச்சர், பொருளாதார அமைச்சர் என்றெல்லாம் ஜனாதிபதிதான் கூறி வருகின்றார். அவர் உட்பட சிலருக்கு ஐக்கிய மக்கள் சக்தி கூட்டணியைச் சீர்குலைக்கும் தேவைப்பாடு உள்ளது, அதனால்தான் குழப்பத்தை ஏற்படுத்தும் விதத்தில் இப்படியான கருத்துக்கள் பரப்பப்பட்டு வருகின்றன.

நான் நிதி அமைச்சைக் கேட்கவும் இல்லை, அது வழங்கப்படும் என உறுதியளிக்கப்படவும் இல்லை. ஐக்கிய மக்கள் சக்தியின் பொருளாதாரக் குழுவில் உள்ள ஒருவருக்குத்தான் நிதி அமைச்சு பதவி வழங்கப்பட வேண்டும்." – என்றார்.

## அநுரவுக்குப் பயந்து...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

அகில இலங்கை பொது மீனவர் சம்மேளனத்தின் ஏற்பாட்டில் இடம்பெறும் 2024 ஆம் ஆண்டுக்கான அம்பாறை மாவட்ட மீனவர் மாநாடு சாய்ந்தமருது மருதூர் சதுக்கத்தில் நடைபெற்றபோதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

"உள்ளூராட்சி சபைத் தேர்தல் பிற்போடப்பட்டுள்ளதால் ஜனாதிபதித் தேர்தலும் பிற்போடப்படுமா என்ற கேள்வி பொது மக்கள் இடையே எழுந்து வருகின்றது. எனவே, இங்கு மக்களுக்கு ஒரு விடயத்தை நாம் கூற விரும்புகின்றோம். அதாவது உள்ளூராட்சி சபைத் தேர்தலைப் பிற்போடலாம். மாகாண சபைத் தேர்தலைப் பிற்போடலாம். ஆனால், ஜனாதிபதித் தேர்தலைப் பிற்போட முடியாது. ஏனெனில் ஜனாதிபதி ஒருவர் இன்றி இந்த நாட்டின் ஆட்சியை மேற்கொள்ள முடியாது என்ற காரணமாகும். ஆகவேதான் இந்த இடத்தில் தெளிவான விடயம் ஒன்றைக் கூற விரும்புகின்றேன். ஜனாதிபதித் தேர்தலானது குறித்த தினத்தில் நிச்சயமாக நடைபெறும்.

தற்போது உள்ள ஜனாதிபதியின் ஆட்சிக் காலத்தின் கடைசி நாள் எதிர்வரும் நவம்பர் மாதம் 17ஆம் திகதியாக இருக்கின்றது. இதற்கமைய புதிய ஜனாதிபதியாகத் தேசிய மக்கள் சக்தியின் தலைவர் அநுரகுமார திஸாநாயக்கவைத் தெரிவு செய்ய சிங்கள, தமிழ், முஸ்லிம் மக்கள் தற்போது தீர்மானித்து விட்டார்கள்.

இந்தத் தேர்தலில் சஜித் பிரேமதாஸவும் ரணில் விக்கிரமசிங்கவும் வேட்பாளர்களாக வருவார்களாம். ஆனால், தற்போதைய புலனாய்வு அறிக்கை மற்றும் இதர ஆய்வுகளின் அடிப்படையிலும் எதிர்கால ஜனாதிபதியாக தேசிய மக்கள் சக்தியின் தலைவர் அநுரகுமார திஸாநாயக்க வருவார் என்பது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. இன்னும் 7 மாதங்களில் ஜனாதிபதித் தேர்தலுக்கான வேட்புமனுக்கள் கோரப்பட்டு தேர்தலுக்கான ஏற்பாடுகள் இடம்பெறவுள்ளன. இப்போது நாட்டின் தலைவர் ரணில் – ராஜபக்ஷ என்பது ஒன்றாகப் பூட்டப்பட்ட பூட்டு. அதை எம் மக்கள் புரிந்துகொள்ள வேண்டும்." – என்றார்.

## விபத்தில் உயிரிழந்த...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

சிலாபம் – ஆராச்சிக்கட்டுவவில் அமைந்துள்ள அவரது இல்லத்துக்கு இன்று காலை 10 மணியளவில் எடுத்துச் செல்லப் படவுள்ளது.

இதனிடையே, ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மற்றும் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் தலைவரும் முன்னாள் ஜனாதிபதியுமான மஹிந்த ராஜபக்ஷ உள்ளிட்டோர், சனத் நிஷாந்தவின் கொழும்பிலுள்ள இல்லத்துக்கு நேற்றுப் பகல் சென்று தமது அனுதாபங்களைத் தெரிவித்துள்ளனர்.

நேற்று அதிகாலை 2 மணியளவில் இடம்பெற்ற விபத்தில் இராஜாங்க அமைச்சர் சனத் நிஷாந்தவும், அவரது பாதுகாப்பு உத்தியோகத்தரும் உயிரிழந்தனர்.

கட்டுநாயக்கவிலிருந்து கொழும்பு நோக்கிப் பயணித்த சனத் நிஷாந்தவின் ஜீப், அதிவேக வீதியின் 11 ஆவது மைல்கல் பகுதியில் முன்னால் பயணித்துக் கொண்டிருந்த கொள்கலன் வாகனத்துடன் மோதியது.

பின்னர் ஜீப், வீதி பாதுகாப்பு வேலியில் மோதி விபத்துக்குள்ளாகியது என்று பொலிஸார் கூறினர்.

சனத் நிஷாந்த பயணித்த ஜீப்பின் சாரதிக்கு ஏற்பட்ட தூக்கக் கலக்கத்தால் விபத்து இடம்பெற்றிருக்கலாம் என்று பொலிஸார் சந்தேகிக்கின்றனர்.

இதனிடையே, இராஜாங்க அமைச்சர் சனத் நிஷாந்த பயணித்த ஜீப் மோதிய கொள்கலன் சாரதி கைது செய்யப்பட்டுள்ளார். தெரணியகல பகுதியை சேர்ந்த 39 வயதான சாரதியே கைது செய்யப்பட்டுள்ளார்.

சந்தேகநபரை வத்தளை நீதிவான் முன்னிலையில் ஆஜர்படுத்துவதற்கு நேற்று நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது. .

சனத் நிஷாந்த, சிலாபத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற திருமண நிகழ்வொன்றில் கலந்துகொண்டு கொழும்பு திரும்பிய சந்தர்ப்பத்திலேயே இந்த அனர்த்தம் இடம்பெற்றுள்ளது. நான்கு பிள்ளைகளின் தந்தையான சனத் நிஷாந்தவுக்கு உயிரிழக்கும்போது வயது 48.



# காங்கேசன் துறைமுக அபிவிருத்திக்கு 35 ஏக்கர் நிலத்தை சுவீகரிக்க முயற்சி

(ந.லோகதயாளன்)

யாழ்ப்பாணம், ஜனவரி. 26

காங்கேசன்துறை சீமேந்து ஆலைக்கு அருகில் 35 ஏக்கர் நிலம் துறைமுகங்கள் அதிகார சபைக்கு வழங்குவது தொடர்பில் தெல்லிப்பளை பிரதேச செயலகத்தில் விசேட கலந்துரையாடல் ஒன்று இடம்பெற்றது.

தெல்லிப்பளை பிரதேச செயலகத்தில் நேற்று முன்தினம் பிரதேச செயலாளர் தலைமையில் இடம்பெற்ற இக் கலந்துரையாடலில் காங்கேசன்துறை துறைமுக அபிவிருத்திக்கு தேவையான 50 ஏக்கர் நில சுவீகரிப்பு தொடர்பிலேயே ஆராயப்பட்டது.

காங்கேசன்துறை துறைமுகத்தை அபிவிருத்தி செய்யும் நோக்கில் ஆய்வுகள், மதிப்பீடுகள் நிறைவு பெற்றபோதும் அதன் பணிகள் ஆரம்பிக்கப்படவில்லை. இந்த நிலையில் அந்தப் பணியை ஆரபிக்கவென அமைச்சரவை அனுமதி 2020 ஆண்டு ஜனவரி 9 ஆம் திகதிய அமைச்சரவையில் சமர்ப்பிக்கப்பட்டு 2020 ஜனவரி 13ஆம் திகதிய அமைச்சரவைக் கூட்டத்தில் ஆராயப்பட்டது.

இதில் அனுமதிகோரிய 50 ஏக்கர் நிலத்தில் 15 ஏக்கர் நிலம் ஏற்கனவே துறைமுக அதிகார சபைக்கு உரியது எனவும், ஏனைய 35 ஏக்கரும் அரச மற்றும் தனியார் நிலம் எனவும் கண்டறியப்பட்டது.

இந்த 35 ஏக்கரில் வைத்தியசாலை, பூங்கா, காங்கேசன் துறை சீமேந்து தொழிற்சாலை ஆகியவற்றுடன் தனியாருக்குச் சொந்தமான 12 ஏக்கர் நிலமும் உள்ளது என அப்போது உறுதிசெய்யப்பட்டது..

இதன் பிரகாரம் 2020இல் அமைச்சரவை அனுமதி வழங்கப்பட்டது. இருந்தபோதும் இந்த நிலங்கள் சுவீகரிப்பு முயற்சியிலேயே இருந்தன. அதனை முன்னெடுக்கும் பணியை இறுதி செய்யும் நோக்கிலேயே துறைமுக அதிகார சபையின் அதகாரிகள், மாவட்ட மேலதிக அரச அதிபர் (காணி) என சகல தரப்பும் உள் அடக்கிய விசேட கலந்துரையாடல் இடம்பெற்றுள்ளது.



# நமது கருத்து

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்

259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com

## அடக்குமுறைச் சட்டம் அமுலுக்கு

மாறிவரும் சர்வதேச அரசியல் போக்குகளுக்கும், தொழில்நுட்ப விருத்திகளுக்கும் ஏற்ப நாட்டின் பொருளாதாரத்தை வழி நடத்தக் கூடிய நவீன சிந்தனைச் சிற்பி - அறிவியலாளர் - தாமே என்ற மாதிரி படம் காட்டி வந்தார் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க.

நொடித்துப் போய் அதலபாதாளத்தில் விழுந்து கிடக்கும் நாட்டின் பொருளாதாரத்தைத் தூக்கி நிறுத்தக்கூடிய நிபுணர் தாமே என்ற மாதிரி பாவனை பண்ணி, நாட்டின் டிஜிட்டல் பொருளாதாரத்தை மேம்படுத்தும் நவீனத்துவ வழிகாட்டி தாமே என்ற சாரப்படக் கருத்துக்களை வெளியிட்டு வந்தவர் அவர்.

ஆனால், அவரின் குறுகிய சிந்தனை போக்கினால் - செயற்பாட்டினால் - நாட்டின் டிஜிட்டல் பொருளாதாரமே அடிபட்டுப் போகப் போகின்றது என்று எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

இணைய வழிப் பாதுகாப்புச் சட்டத்தினால் நாட்டின் டிஜிட்டல் பொருளாதாரமே அடிபடப் போகின்றது என எதிர்க்கட்சிகள் நாடாளுமன்றத்தில் கடுமையான முன்னெச்சரிக்கைகளை விடுத்தும் அவற்றை பொருட்படுத்தாது அந்தச் சட்டமூலத்தை அவசர அவசரமாக - வல்வந்தமாக - நிறைவேற்றி சட்டமாக்கி இருக்கின்றது ரணிலின் அரசு.

தற்போதைய டிஜிட்டல் யுகத்துக்கு எதிரானபலமுக்கியஅம்சங்களைஇந்தஇணைய வழிப்பாதுகாப்புச்சட்டம்கொண்டிருக்கின்றது என்பதை ஐக்கிய மக்கள் சக்தியின் உறுப்பினர் எரான் விக்கி ரமரத்ன நாடாளுமன்றத்தில் வலியுறுத்தி கூறினார்.

வரப் போகின்ற தேர்தல்களில் சமூக ஊடகங்கள் ஆளும்தரப்புக்கு எதிராக மக்கள் கருத்து நிலையை உருவாக்கி விடுமோ என அஞ்சும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவும், அவரது அரசுத் தரப்பினரும் வர முன் காத்தல் என்ற தத்துவத்தின் கீழ், சமூக ஊடகங்களுக்கு முன்கூட்டியே ஆப்படித்து, நிரந்தரமாக வாய்ப்பூட்டுப் போடும் விதத்தில் இந்த இணையவழிப் பாதுகாப்புச் சட்டமூலத்தை அவசர அவசரமாகக் கொண்டு வந்து, முறையற்ற முறையில் நிறைவேற்றியும் விட்டனர்.

இதன் விளைவுகள் மோசமாக இருக்கும் என்பதை எதிர்க்கட்சிப் பிரதிநிதிகள் மட்டுமல்லர், சர்வதேச மன்னிப்பு சபை, மனித உரிமைகள் கண்காணிப்பகம், ஐ.நா. மனித உரிமைகள் தரப்பினர் உட்பட பல சர்வதேச பொது அமைப்புக்கள் பகிரங்கமாகச் சுட்டிக்காட்டி விட்டன.

அந்தக் குழுவில் இலங்கைக்கான அமெரிக்க தூதுவர் ஜூலி சங்கும் இணைந்துள்ளார்.

அதிக வரையறைகளை விதிக்கும், தெளிவற்ற சட்டங்களின் மூலம் இலங்கையின் பொருளாதார அபிவிருத்தி பாதிக்கப்படும் என அவர் விசனம் தெரிவித்துள்ளார்.

இத்தகைய சட்டங்கள் முதலீடுகளையும் டிஜிட்டல் பொருளாதார அபிவிருத்தியையும் பாதிக்கும் எனவும் அவர் முன்னெச்சரிக்கை விடுத்துள்ளார்.

இந்த சட்டத்தின் மூலம் கருத்து சுதந்திரம், புத்தாக்கம் மற்றும் தனியுரிமைக்கு அச்சுறுத்தல் ஏற்படுவதாகவும், இது தொடர்பில் சிவில் சமூகமும் தொழில்நுட்ப நிறுவனங்களும் அடங்கலாக பிரதான தரப்பினர் முன்வைத்த முக்கிய விடயங்கள் உள்வாங்கப்படவில்லையெனவும் அவர் கவலையுடன் சுட்டிக்காட்டியிருக்கின்றமை கவனிக்கப்பட வேண்டும்.

இதுதொடர்பில்அமெரிக்காகவலையடைவதாகவும், இவ்வாறான செயற்பாடுகள் மூலம் ஜனநாயகத்தின் பெறுமதி ஆபத்தில் வீழ்ந்துவிடும் அபாயம் இருப்பதாகவும் அவர் சொல்வது முக்கிய விடயம்.

இணையவழிப்பாதுகாப்புசட்டமூலம் நிறைவேற்றப்பட்டமை இலங்கையின் மனித உரிமைகள் மீதான பாரிய தாக்குதல். இந்தச் சட்டம் கருத்துச் சுதந்திரத்தை ஒடுக்குவதற்கும் கருத்து வேறுபாடுகளை அடக்குவதற்கும் அரசாங்கத்தினால் பயன்படுத்தக்கூடிய புதிய ஆயுதம் எனவும் சர்வதேச மன்னிப்புச் சபை தெரிவித்துள்ளமையும் விசேடமாகக் கவனிக்கப்பட வேண்டும்.

இந்தச் சட்டத்தின் பெரும்பாலான பகுதிகள் சர்வதேச மனித உரிமை நியமங்களுக்கு உட்பட்டவையல்ல. சிவில் மற்றும் அரசியல் உரிமைகள் தொடர்பான சர்வதேச உடன்படிக்கையில் கைச்சாத்திட்டுள்ள இலங்கை, அதற்கு முரணாக இப்படி நடந்து கொள்வது ஏற்றுக் கொள்ளத் தக்கதல்ல என சர்வதேச மன்னிப்புச் சபை சுட்டிக்காட்டியிருப்பது அற்ப விடயமல்ல.

ரணிலின் அரசு நாடாளுமன்றத்தில் தனக்குள்ள பெரும்பான்மைப் பலத்தை வைத்துக்கொண்டு இப்படி சர்வதேச மனித உரிமை நியமங்களுக்கு முரணான அடக்குமுறைச் சட்டங்களைக் கொண்டு வருவது, ஏற்கனவே பொருளாதாரச் சீரழிவில் அடிபட்டு, அதிலிருந்து மீளெழ முயற்சிக்கும் இலங்கைத் தீவுக்கு மேலும் பெரும் பாதிப்பையும் பின்னடைவையும் தரப்போகின்றது என்பது நிச்சயம்.




# இனிப்புப் பண்டத் தொழில்துறைக்கு அரசு முழுமையாகவே ஆதரவளிக்கும்

## ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவிப்பு

இனிப்புப் பண்டத் தொழில்துறையை முன்னணி ஏற்று மதித் துறையாக மாற்றுவதற்கு அரசாங்கம் ஆதரவளிக்கும் என ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க வலியுறுத்தினார்.

கொழும்பு சினமன் கிரேண்ட் ஹோட்டலில் நேற்று முன்தினம் நடைபெற்ற இலங்கை இனிப்புப் பண்ட உற்பத்தியாளர் சங்கத்தின் 30 ஆவது பொதுச் சபைக் கூட்டத்தில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மேற்கண்டவாறு தெரிவித்தார்.







கொக்கோ உள்ளிட்ட பயிர்களைப் பயிரிடுவதற்கு அரசாங்கத்திற்குச் சொந்தமான தோட்டங்களை குத்தகை அடிப்படையில் வழங்க அரசாங்கம் திட்டமிட்டுள்ளதாகவும் ஜனாதிபதி தெரிவித்துள்ளார்.

சிலாபம் மற்றும் குருநாகல் பிரதேசங்களில் உள்ள தோட்டங்களுக்குச் சொந்தமான அனைத்துக் காணிகளையும், ஜனதா தோட்ட அபிவிருத்திச் சபை, அரச பெருந்தோட்டக் கூட்டுத்தாபனத்திற்குச் சொந்தமான எல்கடுவ பெருந்தோட்ட நிறுவனத்துக்கு சொந்தமான ஏனைய காணிகளையும் இதற்காகப் பயன்படுத்துவது குறித்து அவதானம் செலுத்தப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்துள்ளார்.

அத்துடன், இதுவரையில் பயன்படுத்தப்படாத மகாவலி ஏ மற்றும் பி வலயங்களில் பயிர்ச்செய்கையை ஊக்குவிப்பதன் மூலம் நாட்டில் உணவுப் பாதுகாப்பை ஏற்படுத்த



முடியும் எனவும் ஜனாதிபதி சுட்டிக்காட்டியுள்ளார்.

அத்துடன், நாட்டில் போட்டிமிக்க ஏற்றுமதிப் பொருளாதாரத்தை உருவாக்குவதற்காக தேசிய உற்பத்தித் திறன் ஆணைக்குழு ஸ்தாபிக்கப்படும் எனவும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

ஏனைய நாடுகளுடன் தற்போதுள்ள சுதந்திர வர்த்தக உடன்படிக்கைகளையும் தொழில்நுட்ப ஒத்துழைப்பு உடன்படிக்கைகளையும் வலுப்படுத்த அரசாங்கம் எதிர்பார்த்திருப்பதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

அத்துடன், தேயிலை ஆராய்ச்சி நிறுவனம், தென்னை ஆராய்ச்சி நிறுவனங்களும் நவீனமயப்படுத்தப்பட்டு வருவதாகவும் இந்த ஆண்டுக்கான வரவு செலவுத் திட்டத்தில் ஆராய்ச்சித் துறைக்காக சுமார் எண்ணூறு கோடி ரூபா ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதாகவும் ஜனாதிபதி தெரிவித்தார்.








# இளையராஜாவின் மகள் பவதாரிணி இலங்கையில் நேற்று காலமானார்!

இசையமைப்பாளர் இசைஞானி இளையராஜாவின் மகளும், பாடகியுமான பவதாரிணி நேற்று இலங்கையில் காலமானார்.

இவர் தனது 47ஆவது வயதில் காலமானார் என குறிப்பிடப்படுகின்றது.

புற்று நோயால் பாதிக்கப்பட்ட பவதாரிணி, இலங்கையில் ஆயுர்வேத சிகிச்சை பெற்று வந்த நிலையில் சிகிச்சை பலனின்றி நேற்று காலமானார்.

கடந்த 5 மாதங்களாகவே புற்று நோயால் பாதிக்கப்பட்டு இருந்த பவாதாரிணி, கொழும்பில் உள்ள தனியார் வைத்தியசாலையொன்றில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்றுவந்திருந்தார்.

இந்நிலையில், நேற்று மாலை 5.20 மணி அளவில் இலங்கையில் சிகிச்சை பலனின்றி அவர் காலமானார். அவரது உடல் வெள்ளிக்கிழமை மாலை சென்னை கொண்டு வரப்படும் என தகவல் வெளியாகியுள்ளது.

இளையராஜா இசையமைத்த ராசய்யா திரைப்படத்தின் மூலம் பவதாரிணி பாடகியாக அறிமுகமானார்.

தமிழ், இந்தி, தெலுங்கு, கன்னட படங்களில் அவர் இசையமைப்பாளராகவும் செயற்பட்டுள்ளார்.

பாரதி பாடத்தில் மயில் போல பாடலுக்காக சிறந்த பின்னணி பாடகிக்கான தேசிய விருதை அவர் பெற்றிருந்தார்.

அத்துடன் என் “வீட்டுச் சன்னல்“ என்ற பாடலையும், தாமிரபரணி படத்தில் “தாலியே தேவை இல்லை” உள்ளிட்ட பாடல்களையும் பவதாரிணி பாடியுள்ளார்.

இவரது மறைவுக்கு சினிமா பிரபலங்கள், ரசிகர்கள் என பலரும் இரங்கல் தெரிவித்து வருகின்றனர்.

இதேவேளை, எதிர்வரும் 27 மற்றும் 28ஆம் திகதிகளில் கொழும்பில் இடம்பெறவுள்ள மாபெரும் இசைநிகழ்ச்சிக்காக இளையராஜா நேற்று மாலை இலங்கை வந்திருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

பவதாரிணியின் மறைவுக்கு முதல்வர் மு.க.ஸ்டாலின் இரங்கல் தெரிவித்துள்ளார்.

முதல்வர் தனது இரங்கல் செய்தியில் குறிப்பிடுகையில், “பிரபல பின்னணிப் பாடகியும் இசைஞானியின் அன்பு மகளுமான பவதாரிணியின் அகால மரணத்தால் அதிர்ச்சியும் வேதனையும் அடைந்தேன். இசைமேதைகள் நிறைந்த குடும்பத்தில் பிறந்த பவதாரிணி , தேனினும் இனிய



தனது குரல்வளத்தால் இளம் வயதிலேயே ரசிகர்களின் நெஞ்சில் தனியிடம் பிடித்தவர் ஆவார். கேட்டதும் அடையாளம் கண்டுகொண்டு பரவசமடையச் செய்யும் மிகவும் தனித்துவமான குரல் அவருடையது. பாரதி திரைப்படத்தில் தனது தந்தையின் இசையமைப்பில் பாடிய “மயில் போல பொண்ணு ஒன்னு“ பாடலுக்காக இளம் வயதிலேயே தேசிய விருதும் பெற்றவர். இசையமைப்பாளராகவும் பல படங்களுக்குப் பணிபுரிந்துள்ளார் என்பதும் குறிப்பிடத்தக்கது.

இன்னும் பல்லாண்டுகள் வாழ்ந்து இசையுலகில் எத்தனையோ சாதனைகளைச் செய்திருக்க வேண்டிய பவதாரிணியின் திடீர் மறைவு இசையுலகில் ஈடுசெய்தற்கரிய இழப்பு. அவர் விட்டுச் செல்லும் இடம் அப்படியே இருக்கும். தனது பாசமகளை இழந்து துடிக்கும் இசைஞானிக்கும், பவதாரணியின் சகோதரர்கள் யுவன் சங்கர் ராஜா, கார்த்திக் ராஜா உள்ளிட்ட குடும்பத்தினருக்கும் திரையுலகினருக்கும் ரசிகர்களுக்கும் எனது ஆழ்ந்த இரங்கலையும் ஆறுதலையும் தெரிவித்துக் கொள்கிறேன்” என்று குறிப்பிட்டுள்ளார்.

# மறைந்த நடிகர் விஜயகாந்துக்கு பத்ம பூஷன் விருது அறிவிப்பு

இந்திய குடியரசு தினத்தை முன்னிட்டு நாடு முழுவதும் விழா கொண்டாட்டத்திற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள் ளன.

இந்தநிலையில் 2024ஆம் ஆண்டுக்கான பத்ம விருதுகளை மத்திய அரசு அறிவித்துள்ளது. இதில் மறைந்த நடிகரும், தே.மு.தி.க. கட்சி தலைவருமான விஜயகாந்துக்கு பத்மபூஷன் விருது அறிவிக்கப்பட்டுள்ளது.

கலைத்துறையில் சிறந்த சேவையாற்றியதற்காக அவருக்கு பத்ம பூஷன் விருது அறிவிக்கப்பட்டுள்ளது.

அதேபோல் கோவையைச் சேர்ந்த வள்ளி ஒயில் கும்மியாட்ட நடனக் கலைஞர் பத்திரப்பனுக்கு பத்மஸ்ரீ விருது அறிவிக்கப்பட்டுள்ளது.

தமிழகத்தைச் சேர்ந்த பரதநாட்டிய கலைஞர் பத்மா சுப்பிரமணியம், நடனக் கலைஞர் வைஜெயந்தி மாலா, பிரபல தெலுங்கு நடிகர் சிரஞ்சீவி, தமிழ்நாட்டின் முன்னாள் ஆளுநர் பாத்திமா பீவி, முன்னாள் குடியரசுத் துணைத் தலைவர் வெங்கையா நாயுடு ஆகியோருக்கும் பத்ம விபூஷன் விருது அறிவிக்கப்பட்டுள்ளது.



# சீன வணிக வளாகத்தில் தீ விபத்து: 39 பேர் பலி



சீனாவின், யுஷுயி மாவட்டத்திலுள்ள பிரபல வணிக வளாகமொன்றில் நேற்று முன்தினம் இடம்பெற்ற தீ விபத்தில் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 39 ஆக அதிகரித்துள்ளது.

அந்த வணிக வளாகத்தின் அடித்தளத்தில் பற்றிய தீயானது கட்டடத்தின் ஏனைய பகுதிகளுக்கு பரவியுள்ள நிலையில், வணிக வளாகம் முழுவதும் புகை மூட்டம் சூழ்ந்துள்ளது.

இதன்காரணமாக ஏராளமான ஊழியர்களும், நுகர்வோரும் அந்த வணிக வளாகத்துக்குள் சிக்கிக் கொண்டனர்.

இந்த நிலையில், விபத்தில் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 39 ஆக உயர்ந்துள்ளதாக அந்நாட்டு ஊடகங்கள் தெரிவித்துள்ளன.

# மாலியில் தங்கச் சுரங்கம் இடிந்து விபத்து: 70 இற்கு மேற்பட்டோர் உயிரிழப்பு





மாலி நாட்டில் தங்கச் சுரங்கமொன்று திடீரென இடிந்து வீழ்ந்ததில் நூற்றுக்கணக்கானோர் மண்ணில் புதைந்துள்ளனர் என தகவல் வெளியாகியுள்ளது.

மாலியின் தென்மேற்கு கோலிகோரோ பகுதியில் உள்ள கங்காபா மாவட்டத்தில் உள்ள தங்கச் சுரங்கமே இவ்வாறு இடிந்து வீழ்ந்துள்ளது.

இந்த விபத்தில் மண்ணில் புதைந்துள்ளவர்களை மீட்பதற்கு உடனடியாக மீட்பு படையினர் வரவழைக்கப்பட்டு மீட்பு பணிகளில் ஈடுபடுத்தப்பட்டனர்.

எனவே இந்த விபத்திற்கு என்ன காரணம் என்பது உடனடியாகத் தெரியாத நிலையில் தற்போது வெளியிடப்பட்ட அறிக்கையில் தங்கச் சுரங்கம் இடிந்து விழுந்ததில் 70 இற்கும் மேற்பட்டோர் உயிரிழந்துள்ளனர் என தகவல்கள் வெளியாகியுள்ளன.

மேலும் இந்த எண்ணிக்கை அதிகரிக்கக் கூடும் என்றும் எதிர்பார்க்கப்படுவதாக கூறப்படுகின்றது.

ஆபிரிக்காவின் மூன்றாவது பெரிய தங்க உற்பத்தியாளரான மாலியில் இத்தகைய விபத்துகள் ஏற்படுவது வழமையாகிவிட்டது.

ஏனெனில் இது போன்ற சுரங்கப் பணிகளில் ஈடுபடும் சிறிய தொழிலாளர்கள் மற்றும் முறை சாரா தொழிலாளர்கள் முறையான பாதுகாப்பு நடவடிக்கைகளை பின்பற்றுவது இல்லை எனத் தெரிவிக்கப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது.

# அணு ஆயுத ஏவுகணையை சோதனை செய்தது வடகொரியா



கொரிய தீபகற்பத்தில் தொடர்ந்து போர் பதற்றம் நீடித்து வருகின்ற நிலையில், வடகொரியா தற்போது அணுசக்தி திறன்கொண்ட புதிய ஏவுகணையை சோதனை செய்துள்ளது.

உலக நாடுகளின் பொருளாதார தடைகள் மற்றும் எதிர்ப்புகளையும் மீறி வடகொரியா தொடர்ந்து ஏவுகணை சோதனைகளை நடத்தி வருகிறது.

இதனால் கொரிய தீபகற்பத்தில் தொடர்ந்து போர் பதற்றம் நீடிக்கிறது.

இந்த நிலையில் அணுசக்தி திறன்கொண்ட புதிய ஏவுகணையை வடகொரியா சோதனை செய்துள்ளது.

இது தொடர்பாக வடகொரியாவின் அரசு ஊடகம் வெளியிட்டுள்ள செய்தியில், "புல்வசல்-3-31" என்று பெயரிடப்பட்டுள்ள அணுசக்தி திறன்கொண்ட புதிய ஏவுகணை வெற்றிகரமாக சோதனை செய்யப்பட்டதாகவும், இதனால் அண்டை நாடுகளுக்கு பாதுகாப்பு அச்சுறுத்தல் எதுவும் இல்லை என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

முன்னதாக நேற்று முன்தினம் மஞ்சள் கடல் பகுதியில் வடகொரியா ஏவுகணை தாக்குதல் நடத்தியதாக தென்கொரிய இராணுவத்தின் கூட்டுப்படைத் தலைவர் தெரிவித்திருந்தார்.

இந்த நிலையில், வடகொரிய இராணுவத்தின் நடவடிக்கைகளை தொடர்ந்து கண்காணிக்க அமெரிக்காவுடன் நெருக்கமாக பணியாற்றி வருவதாகவும் தென் கொரிய இராணுவம் தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.




# நேற்று தைப்பூசத்தன்று யாழில் வயலில் புதிர் எடுக்கும் நிகழ்வு





தைப்பூசத்தினை முன்னிட்டு பாரம்பரிய முறைப்படி வயலில் புதிர் எடுக்கும் சம்பரதாய நிகழ்வுகள் இன்று யாழ்ப்பாணத்தில் இடம்பெற்றது.

யாழ்ப்பாணம் சங்குவேலி வயலில் விளைந்திருந்த நெற்கதிர்களை அப்பிரதேச விவசாயிகள் பாரம்பரிய முறைப்படி மாட்டு வண்டியில் சென்று சூரியனுக்கு வணக்கம் தெரிவித்து அறுவடை செய்தனர்.

நெற்கதிர்களை தலையில் சுமந்துசென்று மாட்டுவண்டியில் ஏற்றி பாரம்பரிய முறைப்படி உடுவில்,மருனார்மடம் ஊடாடாக இணுவில் கந்தசுவாமி கோவிலுக்கு பொங்கல் வைத்து காணிக்கையாக வழங்கினர்.

இப்பாரம்பரிய நிகழ்வு ஒவ்வொரு ஆண்டும் நடைபெறும் வருகின்றமை குறிப்பிடத்தக்கது.







# தாய்லாந்துடன் இலங்கை சுதந்திர வர்த்தக ஒப்பந்தம்

## அமைச்சரவை அனுமதி வழங்கியது



இலங்கைக்கும், தாய்லாந்துக்கும் இடையில் சுதந்திர வர்த்தக ஒப்பந்தத்தை ஏற்படுத்துவதற்கு அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளது.

இது தொடர்பான யோசனையை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அமைச்சரவையில் முன்வைத்திருந்த நிலையில், அமைச்சரவை அதற்கான அனுமதியை வழங்கியுள்ளது.

இரு தரப்பினருக்கும் இடையில் இதுவரை 9 சுற்றுப் பேச்சுக்கள் நிறைவடைந்துள்ள நிலையில், சுதந்திர வர்த்தக ஒப்பந்த சட்டமூலம் தயாரிக்கப்பட்டுள்ளது.

அதற்கு சட்டமா அதிபரின் அனுமதியும் கிடைக்கப்பெற்றுள்ளது.

அத்துடன், ஏற்றுமதி விவசாயத் திணைக்களத்தின் கீழ் தற்போது இயங்கி வரும் தேசிய கறுவா ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிலையத்தை புதிதாக ஸ்தாபிக்கப்பட்டுள்ள கறுவா திணைக்களத்திற்கு ஒப்படைப்பதற்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

விவசாய மற்றும் பெருந்தோட்டத் துறை அமைச்சர் முன்வைத்த யோசனைக்கு இவ்வாறு அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது.

இதன்படி, தேசிய கறுவா ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிலையத்தின் அனைத்து சொத்துக்கள் மற்றும் அதனால் நடைமுறைப்படுத்தப்பட்டு வரும் அனைத்து நடவடிக்கைகளையும் கறுவா அபிவிருத்தி திணைக்களத்திற்கு ஒப்படைப்பதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, தண்டனைச் சட்டக் கோவையில் வன்புணர்வுக் குற்றம் தொடர்பில் சட்டத்திருத்தம் செய்வதற்கும், சட்டத்தில் காணப்படுகின்ற குறைபாடுகளை நிவர்த்தி செய்வதற்கும் அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

நீதி, சிறைச்சாலை அலுவல்கள் மற்றும் அரசமைப்பு மறுசீரமைப்பு அமைச்சர் முன்வைத்த யோசனைக்கு இவ்வாறு அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது.

அத்துடன், ஆண் பிள்ளைகள் வன்புணர்வுக்கு ஈடுபடுத்தப்படுவது குற்றச்செயல் எனவும், அதனை தண்டனை சட்டக்கோவையில் அறிமுகப்படுத்துவதற்கும் அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

# நாட்டின் 19 பல்கலைக்கழகங்களில் 10 ஆம் இடத்திலேயே யாழ் பல்கலை!




| University | Country Rank | Region Rank | World Rank |
|---|---|---|---|
| University of Peradeniya | 1 | 267 | 1064 |
| University of Ruhuna | 2 | 283 | 1093 |
| University of Kelaniya | 3 | 431 | 1456 |
| University of Sri Jayewardenepura | 4 | 451 | 1501 |
| University of Colombo | 5 | 552 | 1722 |
| Rajarata University | 6 | 945 | 2643 |
| Sabaragamuwa University | 7 | 961 | 2680 |
| University of Moratuwa | 8 | 1318 | 3464 |
| Open University of Sri Lanka | 9 | 1385 | 3647 |
| University of Jaffna | 10 | 1629 | 4175 |
| Wayamba University of Sri Lanka | 11 | 1667 | 4274 |
| Uva Wellassa University | 12 | 1669 | 4279 |
| Eastern University of Sri Lanka | 13 | 1782 | 4555 |
| South Eastern University of Sri Lanka | 14 | 1987 | 5017 |
| Dr. Balasaheb Sawant Konkan Krishi Vidypeeth | 15 | 2174 | 5386 |
| Buddhist and Pali University of Sri Lanka | 16 | 2285 | 5586 |
| Ocean University of Sri Lanka | 17 | 2798 | 6540 |
| University of Vocational Technology Ratmalana | 18 | 2958 | 6885 |
| University of Vavuniya | 19 | 3253 | 7370 |

**(ந.லோகதயாளன்)**

இலங்கையில் உள்ள 19 பல்கலைக் கழகங்களின் தர நிலையில் யாழ்ப்பாணம் பல்கலைக் கழகம் 10ஆவது இடத்தில் உள்ளது.

இலங்கையில் உள்ள பொதுப் பல்கலைக் கழகங்களின் தர வரிசையிலேயே யாழ்ப்பாணம் பல்கலைக் கழகம் 10 ஆவது இடத்திலும், வவுனியா பல்கலைக் கழகம் கடைசி இடத்திலும் உள்ளன எனத் தரப்படுத்தப்பட்டுள்ளது. இதேநேரம் இலங்கையில் பேராதனைப் பல்கலைக் கழகம் முதலிடத்திலும், றுகுண. பல்கலைக்கழகம் இரண்டாம் இடத்திலும், களனிப் பல்கலைக்கழகம் 3ஆம் இடத்திலும் உள்ளன. கிழக்குப் பல்கலைக் கழகம் 13 ஆவது இடத்தில் உள்ளது.

சர்வதேச ரீதியில் பேராதனைப் பல்கலைக் கழகம் 1064 ஆவது இடத்திலும், றுகுணுப் பல்கலைக்கழகம் 1093 இடத்திலும்,

களனிப் பல்கலைக்கழகம் 1456 ஆம் இடத்திலும் உள்ள அதேநேரம் யாழ்ப்பாணம் பல்கலைக் கழகம் 41,75ஆவது இடத்திலும் உள்ளமை குறிப்பிடத்தக்கது.

# நுரைச்சோலையில் ஒருவர் கேரளக் கஞ்சாவுடன் கைது



(ரஸீன் ரஸ்மின்)

புத்தளம் – ஆனமடுவ பகுதியில் உள்ள பிரபல குத்தகை நிறுவனம் ஒன்றில் பணியாற்றி வரும், கடன் வழங்கல் பிரிவு உத்தியோகத்தர் ஒருவர் ஒருதொகைக் கஞ்சாவுடன் நுரைச் சோலை இளந்தையடி பகுதியில் வைத்து நேற்றுக் கைது செய்யப்பட்டுள்ளார்.

இந்நபர், காரில் 6 கிலோ 500 கிராம் கேரள கஞ்சாவை கொண்டு சென்ற போது பொலிஸாரால் செய்யப்பட்டுள்ளார் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

இதன் பெறுமதி ஏறக்குறைய 20 லட்சம் ரூபா எனத் தெரிவிக்கப்படுகிறது.

பிரபல குத்தகை நிறுவனமொன்றின் ஆனமடுவ கிளையில் கடன் வழங்கும் அதிகாரியாக கடமையாற்றி வந்த 40 வயதான ஆனமடுவ பிரதேசத்தைச் சேர்ந்த ஒருவரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார்.

இந்த சம்பவம் தொடர்பில் நுரைச்சோலை பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# குடாவெல்ல கடலில் மூழ்கி இளைஞர் ஒருவர் மரணம்!

## மற்றுமோர் இளைஞர் மாயம்



அம்பாந்தோட்டை, குடாவெல்ல மீன்பிடித் துறை முகத்தை அண்மித்து கடலில் குளிக்கச் சென்ற இளைஞர் ஒருவர் நீரில் மூழ்கி உயிரிழந்துள்ளார்.

அதேவேளை, மற்றுமோர் இளைஞர் நீரில் மூழ்கி காணாமல்போயுள்ளார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

குடாவெல்ல கடலில் ஐவர் நேற்றுப் பிற்பகல் 2.30 மணியளவில் குளிக்கச் சென்றபோதே இந்த அனர்த்தம் இடம்பெற்றுள்ளது என்றும் பொலிஸார் குறிப்பிட்டனர்.

குடாவெல்ல பகுதியைச் சேர்ந்த 25 வயதான இளைஞரே இந்தச் சம்பவத்தில் உயிரிழந்துள்ளார். அதே பகுதியைச் சேர்ந்த 35 வயதான இளைஞரே இதன்போது காணாமல்போயுள்ளார்.

அவரைத் தேடும் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன என்றும் பொலிஸார் மேலும் கூறினர்.



# கச்சத்தீவு அந்தோனியார் ஆலய திருவிழாவில் தமிழகத்தில் இருந்து 4,000 பேருக்கு அனுமதி

கச்சத்தீவு புனித அந்தோனியார் ஆலய திருவிழாவில் பங்கேற்க தமிழக பக்தர்கள் விண்ணப்பிக்க முடியும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

கச்சத்தீவு புனித அந்தோனியார் ஆலய திருவிழா அடுத்த மாதம் 23, 24 ஆம் திகதிகளில் நடைபெறவுள்ளது.

கச்சத்தீவு புனித அந்தோனியார் ஆலயத் திருவிழா இரு நாட்டு மீனவர்களும் ஒரே இடத்தில் சந்திக்கும் நிகழ்வாக வருடாந்தம் நடைபெற்று வருகின்றது.

இலங்கையில் இருந்து 4 ஆயிரம் பேரும் தமிழகத்தில் இருந்து 4 ஆயிரம் பேரும் என மொத்தம் 8 ஆயிரம் பேர் இம்முறை திருவிழாவில் கலந்து கொள்ள அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

இந்த நிலையில், கச்சத்தீவு திருவிழாவிற்கு செல்லும் பக்தர்களுக்கான விண்ணப்பப் படிவத்தை நேற்று முதல் பெப்ரவரி 6 ஆம் திகதி வரை வழங்க முடியும் என என ராமேஸ்வரம் புனித சூசையப்பர் தேவாலயத்தின் பங்குத்தந்தை சந்தியாகு அறிவித்துள்ளார் என இந்திய ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.




# அதிக வரையறைகளை விதிக்கும் சட்டங்களால் இலங்கையின் பொருளாதாரத்துக்குப் பாதிப்பு!

அதிக வரையறைகளை விதிக்கும், தெளிவற்ற சட்டங்கள் மூலம் இலங்கையின் பொருளாதார அபிவிருத்தி பாதிக்கப்படும் என இலங்கைக்கான அமெரிக்க தூதுவர் ஜூலி சங் தெரிவித்துள்ளார்.

அவை முதலீடுகளையும் டிஜிட்டல் பொருளாதார அபிவிருத்தியையும் பாதிக்கும் எனவும் அவர் முன்னெச்சரிக்கை விடுத்துள்ளார்.

நாடாளுமன்றத்தில் நேற்று நிறைவேற்றப்பட்ட இணையவழி பாதுகாப்பு சட்டமூலம் தொடர்பில் எக்ஸ் தளத்தில் அவர் இவ்வாறு பதிவிட்டுள்ளார்.

இந்த சட்டத்திருத்தம் மூலம் கருத்து சுதந்திரம், புத்தாக்கம் மற்றும் தனியுரிமைக்கு அச்சுறுத்தல் ஏற்படுவதாகவும் சிவில் சமூகமும் தொழில்நுட்ப நிறுவனங்களும் அடங்கலாக பிரதான தரப்பினர் முன்வைத்த முக்கிய விடயங்கள் உள்வாங்கப்படவில்லையெனவும் இலங்கைக்கான அமெரிக்க தூதுவர் ஜூலி சங் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அமெரிக்கா கவலையடைவதாகவும் இவ்வாறான செயற்பாடுகள் மூலம் ஜனநாயகத்தின் பெறுமதி ஆபத்தில் வீழ்ந்துவிடும் அபாயம் இருப்பதாகவும் இலங்கைக்கான அமெரிக்க தூதுவர் தெரிவித்துள்ளார்.

வெளிப்படைத்தன்மைக்கு முன்னுரிமை வழங்குமாறும், சட்டங்களை வகுக்கும் போது மக்களின் குரலை முடக்காமல் இருப்பதை உறுதிப்படுத்துமாறும் அமெரிக்கா இலங்கையிடம் கோரிக்கை விடுப்பதாகவும் அவர் தனது எக்ஸ் பதிவில் குறிப்பிட்டுள்ளார்.




# இணையவழி பாதுகாப்பு சட்டம் இலங்கை அரசின் புதிய ஆயுதம்

## சர்வதேச மன்னிப்புச் சபை கண்டனம்

இணையவழிப் பாதுகாப்புச் சட்டமூலம் நிறைவேற்றப்பட்டமை இலங்கையின் மனித உரிமைகள் மீதான பாரிய தாக்குதல் என சர்வதேச மன்னிப்புச் சபை தெரிவித்துள்ளது.

இந்தச் சட்டம் கருத்துச் சுதந்திரத்தை ஒடுக்குவதற்கும் கருத்து வேறுபாடுகளை அடக்குவதற்கும் அரசாங்கத்தினால் பயன்படுத்தக்கூடிய புதிய ஆயுதம் எனவும் சபை குறிப்பிட்டுள்ளது.

இணையவழி பாதுகாப்பு சட்டத்தை உடனடியாக மீளப்பெற்று, நாட்டிலுள்ள அனைவரினதும் மனித உரிமைகளுக்கு மதிப்பளிக்கப்படுவதனை உறுதிப்படுத்துமாறும் சர்வதேச மன்னிப்புச் சபை வலியுறுத்தியுள்ளது.

இந்த சட்டத்தின் பெரும்பாலான பகுதிகள் சர்வதேச மனித உரிமை நியமங்களுக்கு உட்பட்டவையல்லவென சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

சிவில் மற்றும் அரசியல் உரிமைகள் தொடர்பான சர்வதேச உடன்படிக்கையில் இலங்கை கைச்சாத்திட்டுள்ளதாக சர்வதேச மன்னிப்புச் சபை சுட்டிக்காட்டியுள்ளது.

இந்த நிலையில், தேர்தலுக்கு முன்னரும் தேர்தலின் போதும் அதன் பின்னரும் மனித உரிமைகளுக்கு உத்தரவாதம் அளிப்பதனூடாக, தமது சர்வதேச மனித உரிமை கடமைகள் மற்றும் கடப்பாடுகளை நிலைநாட்டுவதற்கான அரசியல் விருப்பத்தை இலங்கை அதிகாரிகள் வெளிப்படுத்த வேண்டுமெனவும் சர்வதேச மன்னிப்புச் சபை வலியுறுத்தியுள்ளது.




# களவாடப்பட்ட தலைமுறை: அபரோஜின பழங்குடியின படுகொலை!

- ஐங்கரன் விக்கினேஸ்வரா -

**(26 ஜனவரி என்பது ஆஸ்திரேலியா தினம் (Australia Day) என்றுதான் உலகிற்குத் தெரியும். ஆனால் அதன்பின் உள்ள களவாடப்பட்ட தலைமுறை பற்றியும், அபரோஜின பழங்குடியின படுகொலை பற்றிய உண்மைகள் உலகிற்கு தெரியாது)**

### ஆஸ்திரேலியா தினம் - 26 ஜனவரி:

ஆண்டு தோறும் ஆஸ்திரேலியா தினம், பரவலாக மக்கள் மத்தியில் முக்கியத்துவம் வாய்ந்த ஒன்றாக மாறி விட்டாலும், குறிப்பாக அபரோஜின பூர்வீக குடி மக்களுக்கு வேதனையளிக்கிறது. அதனைக் கொண்டாடுவது ஏன் அவர்களிடத்தில் துக்கத்தை ஏற்படுத்துகிறது பற்றிய வரலாற்று அலசலாக இக் கட்டுரை பிரசுரமாகிறது.

ஆயினும் பல பூர்வீக குடி மக்களுக்கு, இந்த நாள் மிகவும் வித்தியாசமான உணர்வுகளை உண்டாக்குகிறது. பிரித்தானிய காலனித்துவ படையெடுப்பின் தொடக்கத்தைக் குறிக்கும் இந்த நாள் பலருக்கும் துக்கத்தை ஏற்படுத்துகிறது. இந்தப் படையெடுப்புகளின் விளைவாக போர், இனப்படுகொலை, இனவெறி மற்றும் பூர்வீக குடி மக்களுக்கு எதிரான பிற அட்டூழியங்கள், பல தலைமுறைகளாக நடந்ததை, நடப்பதை நினைவுபடுத்தும் நாளாக அமைந்துள்ளது.

ஐரோப்பியரோ சீனரோ கால் வைக்க முன்னமிருந்தே கிட்டத்தட்ட 45000- 60000 ஆண்டுகளுக்கும் மேலாக பழங்குடியின அபரோஜின மக்கள் (aboriginal Australians) அவுஸ்திரேலியாவில் வாழ்ந்து வருகிறார்கள்.

இதுவரையிலான கணிப்புகளின்படி ஆஸ்திரேலியாவில் 60000 ஆண்டுகளுக்கு முன் முதல் மனித இனம் காலடி எடுத்து வைத்தது. அதன் பிறகே ஆஸ்திரேலியாவுக்குள் 18ம் நூற்றாண்டில் தான் ஐரோப்பியர்கள் நுழைந்தனர். இடைப்பட்ட காலத்தில் ஆஸ்திரேலியா தனித்திருந்தது. எந்த இனக் கலப்பும் நடக்கவில்லை, வேறு யாருமே நுழையவில்லை என்றும் நம்பப்பட்டு வந்தது.

இந்தப் பழங்குடியினர் எல்லாருமே ஒரே மொழியைப் பேசுபவர்களல்லர். ஐரோப்பியக் குடியேற்றத்துக்கு (1788) முன்பு இவர்கள் 700 மொழிகளை

பேசி வருகின்றனர். அவற்றுள் கூறி, முர்ரி, நுங்கர், யமாட்ஜி, வங்காய், அனங்கு, யாப்பா, யொல்ங்கு, பலவ ஆகியன பேச்சு வழக்கு மொழிகளாகும்.

### அபரோஜின பழங்குடியினர் :

அவுஸ்திரேலிய நிலப்பரப்பில் வாழ்வோர், ரொறஸ் நீரிணைத் தீவுக்காரர் (Torres Strait Islanders) என இரு வகையாகப் பிரிக்கலாம்.

ரொரஸ் நீரிணை தீவுகள் பப்புவா நியூகினிக்கும் அவுஸ்திரேலியப் பெருநிலப்பரப்பின் வடமுனைக்கும் இடைப்பட்ட தீவுகளாகும்.

### தென் இந்திய இனப்பரம்பல்:

இவர்கள் எப்படி இந்த நிலத்துக்கு வந்தார்கள் என்பதில் இந்தியா மற்றும் தென்கிழக்காசிய நாடுகளூடாக வந்தார்கள் என்றும் கூறப்படுகிறது. ஆயினும் ஆஸ்திரேலியாவில் வசிக்கும் சில ஆதிவாசிகளின் மரபணுக்களில் தென் இந்திய ஆதிவாசிகளின் அடையாளங்கள் இருப்பது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

60000 ஆண்டுகளுக்கு முன் தென் இந்தியாவிலிருந்து ஆஸ்திரேலியாவுக்குள் இந்த மரபணுக்கள் புகுந்திருக்க (தென் இந்தியர்கள் குடியேறியிருக்க) வேண்டும் என்று தெரியவந்துள்ளது. அதிலும் குறிப்பாக இந்த மரபணுக்கள்

திராவிட மொழிகளைப் பேசுவோருடையதாக இருக்கலாம் என்றும் ஆராய்ச்சியாளர்கள் கருதுகின்றனர்.

ஆஸ்திரேலிய பழங்குடியினர் (aboriginal Australians) இடையே நடத்தப்பட்ட மரபணு ஆராய்ச்சிகளில் இந்த இனத்தினரின் மரபணுக்களில் 11 சதவீதம் இந்தியாவின் ஆதிவாசி இனத்தினரின் அடையாளங்கள் உள்ளன என உறுதிப்படுத்தியுள்ளன.

### திராவிட மொழி பிணைப்பு :

இந்த இனக்கலப்பு 60000 ஆண்டுகளுக்கு முன்

# களவாடப்பட்ட தலைமுறை:

## அபரோஜின பழங்குடியின படுகொலை!

நடந்திருப்பதும் தெரிகிறது. இங்கு குடியேறிய தென் இந்திய பழங்குடியினர் தான் ஆஸ்திரேலிய பழங் குடியினருக்கு கருவிகள் செய்யும் தொழில்நுட் பத்தையும் சொல்லித் தந்துள்ளனர் என்கின்றர் வரலாற்று ஆராய்ச்சியாளர்கள்.

அத்துடன் 141 தலைமுறைக்கு முன் இந்த மரபியல் இனக்கலப்பு நடந்திருப்பதையும் ஆராய்ச்சிகள் உறுதிப்படுத்தியுள்ளன. இந்த கால கட்டத்தில் தான் ஆஸ்திரேலிய பழங்குடியினர் கற் களால் ஆன கருவிகளை செய்யும் தொழில்நுட் பத்தையும் அறிந்தனர். இதனால் இந்தக் கலையும் தென் இந்திய பழங்குடியினரால் தான் இங்கே அறி முகமாகியிருக்க வேண்டும் என்று நம்பப்படு கிறது.

இவர்களின் மரபணுக்களும் திராவிட மொழிகளைப் பேசும் இந்தியாவின் தென் பகுதிகளில் இருந்து வந் திருக்க வேண்டும் என்றும் அந்த ஆய்வில் தெரி விக்கப்பட்டுள்ளது. ஆனாலும் இதை உறுதிப்படுத்த மேலும் ஆய்வுகள் தேவை என்கிறார்கள் இன்றைய ஆங்கிலேய வழிவந்த ஆராய்ச்சியாளர்கள்.

### "களவாடப்பட்ட தலைமுறை" - stolen generation:

ஐரோப்பியரால் ஆக்கிரமிக்கப்பட்ட அபரோஜின பழங்குடியினரின் பூர்வீக அவுஸ்திரேலிய நிலப்பரப்பில் பரவிய அம்மை, சின்னம்மை, காசநோய், இருமல், மற்றும் சுவாச நோய்த் தாக்குதலுக்கு அதிகள வில் இப்பூர்வீக மக்கள் பாதிக்கப்பட்டு அதிகள வில் இறந்தார்கள். அதே வேளை வெள்ளையர் களாலும் இந்த மக்கள் அழிக்கப்பட்டார்கள். குறிப் பாக "வேட்டையாடி"யதில் ரஸ்மேனியாவிலிருந்த (Tasmania) ஒரு பழங்குடி இனமே முழுமை யாக அழிக்கப்பட்டது.

1950ம் ஆண்டு வரை பெற்றோரில் ஒருவர் வெள்ளையராயும் மற்றவர் பழங்குடியினராயும் இருந்து பிறக்கும் கலப்புப் பிள்ளைகளை பலவந்த மாக இதற்கென்றே ஏற்படுத்தப்பட்ட நிலையங் களில் அரசே சேர்த்துவிடுமபழங்குடியினரில் இப்படிக் கொண்டு செல்லப்பட்ட குழந்தைகள் "களவாடப் பட்ட தலைமுறை" (stolen generation) என அறியப்படுகின்றனர். இதனைப் பற்றிய அயர வைக் கும் உண்மைக்கதை சொல்லும் படம் "Rabbit Proof Fence" துயர வரலாற்றின் முக்கியமான சான்றாகும்.

### அபரோஜின மண்ணில் அத்து மீறிய ஆக்கிரமிப்பு:

காலனித்துவ அந்நியர்களின் ஆக்கிரமிப்பு இல்லாமல், அமைதிப் பூங்காவாவாக இருந்த ஆஸ்திரேலியா கண்டத்திற்கு 1770-ல் காப்டன் குக் (Captain Cook) என்பவர்தான் ஆஸ்திரேலியா கண்டத்தை கண்டு பிடித்து உலகிற்கு அறிமுகம் செய்தார் என ஆங்கிலேயர் வரலாற்று ஏடுகளில் பறை சாற்றுகின்றனர்.

அதன் பின்னரே ஆஸ்திரேலியா கண்டத்தை பிரித்தானியர்கள் சொந்தம் கொண்டாடி முழுமை யாக ஆக்கிரமித்தனர். இதனை உறுதி செய்யும் விதமாக ஆஸ்திரேலிய நிலப்பரப்பை "யாருமற்ற இடம் (Terra Nullium)" என பிரகடப்படுத்தினார்கள்.

ஆயினும் 1770-ல், ஆஸ்திரேலியா கண்டறி யப்பட்டாலும், 1829-லிருந்துதான் ஆஸ்திரேலியா வில் அந்நியர்களின் குடியேற்றம் நிகழ்ந்தது. 1829-க்கு பின்னரே அந்நியர்களின் குடியேற் றம் நிகழ்ந்தபிறகே, வன்முறையையே அறியாத ஆஸ்திரேலிய பழங்குடியினரான அபரோஜினியரை அழிக்கத் தொடங்கினர்.

### கறுப்பு யுத்தமும் இனப்படுகொலையும்:

1834 ல் பிஞ்சாரா என்ற இடத்தில் இனப்படு கொலையின் ஆரம்பமாக 80 க்கும் மேற்பட்ட அப ரோஜினியரைசுட்டுக்கொன்றனர். தாஸ்மானியா மாநிலத்தில் குடியேறிய ஆங்கிலேயர்கள் 10,000 க்கும் மேற்பட்ட அபரோஜினியரை கொன்று குவித்தனர்.

கொடூரமாக நீர் நிலைகளில் நஞ்சை கலந்து வைத்தனர்.ஆங்கிலேயர்களால் மாவில் விஷம் வைத்து அபரோஜினியருக்கு விநியோகித்து அவர்களை அழித்தனர். இதனை சரித்திர ஆசிரி யர்கள் "கறுப்பு யுத்தம்(டீடயஉம றுயச)" என பதிவு செய்துள்ளனர்.

### நட்ட ஈடு கோரிய பழங்குடி மக்களின் வழக்கு:

பூர்வீகமான தங்களது தலைமுறை வாழ்ந்த நிலத்தை அரசு சுவீகரித்துக்கொண்டதாகவும் இதற்கு நட்டஈடு தரப்பட வேண்டும் எனவும் வலியுறுத்தி அவுஸ் திரேலிய பூர்வீக குடிமக்கள்அவுஸ்திரேலியாவிலேயே அதிகூடிய நட்ட ஈட்டினை கோரும் வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2019 ஆம் ஆண்டு தாக்கல் செய்யப்பட்டுள்ள இந்த வழக்கு பூர்வீக குடிமக்களுக்கு வெற்றியாக அமையுமானால் உலகின் அதிகூடிய நட்ட ஈடு செலுத்தப்பட்ட வழக்குகளில் ஒன்றாக வரலாற்றில் பதிவுசெய்யப்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேற்கு அவுஸ்திரேலியாவின் நூங்கர் பூர்வ குடி மக்கள் தங்களது பூர்வீக நிலத்தின் பெரும்பகுதியான நூங்கர் பிரதேசத்தை மேற்கு அவுஸ்திரேலிய மாநில அரசு சுவீகரித்து வைத்துக்கொண்டு தங்களது உரி மைகளை பறித்திருப்பதாக தெரிவித்திருக்கிறது.

இவ்வாறு சுவீகரித்து வைத்துள்ள – கிட்டத்தட்ட – இரண்டுகோடி ஹெக்டயர் பரப்பளவு கொண்ட நிலம் மேற்கு அவுஸ்திரேலிய அரசாங்கத்தினால் கனிய வள அகழ்வு – விவசாயம் – வர்த்தகம் – பொதுமக் கள் குடியிருப்பு போன்ற வருவாய் ஈட்டும் காரணங் களுக்காக பயன்படுத்தப்படுவதாகவும் அதில் தமக்குரிய உரிமைகள் முற்றாக கபளீகரம் செய்யப்பட்டுள்ளதாக இந்த வழக்கினை தாக்கல் செய்துள்ள பூர்வீக குடி மக்கள் தெரிவித்துள்ளார்.

இதன் மூலம் தங்களுக்கு தமது பூர்வீக நிலத் திலுள்ள பண்பாட்டு – கலாச்சார உரிமைகள் பறிக் கப்பட்டுள்ளன என்றும் அவர் கூறியுள்ளார். இந்த இழப்புக்கு அரசாங்கம் தங்களுக்கு நட்டஈடு வழங்க வேண்டும் என்று குறிப்பிட்டுள்ளனர். இந்த வழக் கின் மூலம் கோரப்பட்டுள்ள நட்ட ஈட்டுத்தொகை 29 ஆயிரம் கோடி டொலர்கள் ஆகும்.

### அரசின் மன்னிப்பு கோரல் :

களவாடப்பட்ட தலைமுறையினர் குறித்தும், அபரோஜின பழங்குடியின மக்கள் மீதான படு கொலைக்காக அன்றைய ஆஸ்திரேலிய பிரதமர் கெவின் ரெட்டு (Kevin Rudd), 13.02.2008 அன்று கான்பெரா தலைநகர் பாராளமன்றில் தனது உரை மூலமாக பொது மக்களிடம், பொது மன்னிப்பு கேட்டு இருபது நிமிடங்கள் உரையாற்றினார். இதுவே முதன்முறையாக பழங்குடி பொது மக்களிடம் கேட்ட பொது மன்னிப்பாகும்.



# மான்னாரில் சிறீதரனுக்கு அமோக வரவேற்பு செல்வா சிலைக்கு அவர் மாலை அணிவிப்பு

(மன்னார் நிருபர்)

இலங்கைத் தமிழரசுக் கட்சியின் புதிய தலைவராகத் தெரிவு செய்யப்பட்டிருக்கும் நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரனை வரவேற்கும் நிகழ்வு நேற்றய் வியாழக்கிழமை மாலை 4.30 மணியளவில் மன்னாரில் இடம் பெற்றது.

இலங்கைத் தமிழரசுக் கட்சியின் மன்னார் மாவட்ட கிளையின் ஏற்பாட்டில் நாடாளுமன்ற உறுப்பினர் சாள்ஸ் நிர்மலநாதன் தலைமையில் இந்நிகழ்வு இடம்பெற்றது.

நேற்று மாலை மன்னார் நகர வந்தடைந்த சிறீதரன் மன்னார் நகரில் அமைந்துள்ள தந்தை செல்வாவின் சிலைக்கு மாலை அணிவித்தார்.

அதனைத் தொடர்ந்து மன்னார் ஆத்தூர் பிரதான வீதியில் அமைந்துள்ள இலங்கைத் தமிழரசுக் கட்சியின் மன்னார் மாவட்ட கிளைக்கு மோட்டார் சைக்கிள் பவனியாக அழைத்துச் செல்லப்பட்டார்.

இந்த நிகழ்வில் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்களான கோடீஸ்வரன், பா.அரியநேந்திரன், சிறிநேசன் ஆகியோர் கலந்து கொண்டிருந்தனர்.

மேலும் இலங்கைத் தமிழரசுக் கட்சியின் மன்னார் மாவட்ட முக்கியஸ்தர்கள்,இளைஞர் அணியினர், ஆதரவாளர்கள் எனப் பலர் கலந்து கொண்டனர்.













# இன்றைய ராசி பலன்கள் - 26.01.2024

## மேஷம்



நீங்கள் இன்று கோவில் விழாக்களில் பங்கு கொள்வீர்கள். இது உங்களுக்கு மகிழ்ச்சியை அளிக்கும். மேலும் திருப்தி கிடைக்கும். இன்று முக்கிய முடிவுகள் எடுப்பதை தவிர்க்கவும்.

இன்று பணிச்சுமை அதிகமாக காணப்படும். இதனை சமாளிக்க திட்டமிட்டு பணியாற்ற வேண்டும்.

உங்கள் துணையுடன் தகவல் பரிமாற்றத்தில் பிரச்சினைகள் காணப்படும். இதற்கு உங்களிடம் காணப்படும் அகந்தை போக்கே காரணமாகும்.

இன்று கூடுதல் செலவினங்கள் ஏற்படும். உங்கள் தேவைகளை பூர்த்தி செய்ய சிறய அளவில் கடன் வாங்குவீர்கள்.

நரம்பு சம்பந்தப்பட்ட பிரச்சினைகளால் பாதிக்கப் படலாம். இதனால் தலைவலி ஏற்படலாம். உங்கள் ஆரோக்கியத்தில் கவனம் செலுத்த வேண்டும்.

## ரிஷபம்



இன்று சுறுசுறுப்புடன் காணப்படு வீர்கள். ஆற்ற வேண்டிய செயல்கள் அதிகமாக இருக்கும். அதிக முயற்சி யின்றி உங்கள் இலக்குகளை அடை வீர்கள். பரந்த நோக்குடன் இருப்பீர்கள். புதிய கருத்துகளை கொண்டிருப்பீர்கள். உங்கள் ஆர்வம் அதிகரிக்கும்.

பணியிடத்தில் உங்கள் திறமைகளை நிரூபிப்பீர் கள். குறித்த நேரத்திற்கு முன்பே பணிகளை முடிப்பீர்கள். இதற்கு உங்கள் மேலதிகாரிகளின் பாராட்டு கிடைக்கும்.

உங்கள் துணையுடன் நேர்மையான அணுகுமுறை கொள்வீர்கள். இதனால் உங்கள் பிரியமானவர் உங்களை நன்கு புரிந்து கொள்வார்.

நிதிநிலைமை திருப்திகரமாக இருக்கும். அதிகமான பணம் சேமிப்பீர்கள்.

ங்களிடம் காணப்படும் ஆற்றல் காரணமாக இன்று உங்கள் ஆரோக்கியம் சிறந்து காணப்படும்.

## மிதுனம்



இன்று மகிழ்ச்சிகரமான நாளாக அமையாது. வெற்றியை நோக்கி உங்கள் இலக்குகளை அமைத்துக் கொள்வது சிறந்தது. இன்று அதிர்ஷ்டத்தை நம்பா தீர்கள்.

பணியில் யதார்த்தமான அணுகு முறை வெற்றியை அளிக்கும். இதன் மூலம் எளிதில் வெற்றி பெறலாம்.

குடும்ப பிரச்சினை ஒன்றின் காரணமாக உங்கள் துணையுடன் மோதல் ஏற்படும். இதனால் தவறான புரிந்துணர்வு ஏற்படும். இதனை பரஸ்பரம் தீர்த்துக் கொள்ள வேண்டும்.

நிதிநிலைமை திருப்திகரமாக இருக்காது. கூடுதல் செலவினங்கள் ஏற்படும். அது சுமையாக காணப்படும். கவலையை உண்டாக்கும்.

மன உளைச்சல் காரணமாக கால் வலி ஏற்படும்.

## கடகம்



இன்று எதிர்பார்த்த பலன்கள் கிடைக் காது. இன்று உங்கள் அணுகுமுறையில் உறுதி மிகவும் அவசியம்.

பணிச்சூழல் திருப்திகரமாக இருக் காது. இன்று காணப்படும் பணி இறுக்கம் உங்களை கவலைக்குள்ளாக்கும். உங்கள் பணி வழிமுறைகளை திட்டமிட வேண்டும்.

உங்கள் துணையுடன் கருத்து வேறுபாடு காணப்படும். வாக்குவாதங்கள் ஏற்படுவதற்கான சாத்தியம் உள்ளது.

இன்று பண வரவிற்கான சாத்தியம் உள்ளது. பணத்தை கவனமாகவும் சாதுர்யமாகவும் செலவு செய்ய வேண் டும்.

உங்கள் குழந்தைகளின் ஆரோக்கியத்திற்காக செலவு ஏற்படலாம். இது உங்களுக்கு கவலையை ஏற்படுத் தும்.

## சிம்மம்



இன்று ஆக்கபூர்வமான பலன்கள் கிடைக்காது. இதனால் தன்னம்பிக் கையும் உறுதியும் இழந்து காணப்படு வீர்கள். மாற்றங்களும் பயணங்களும் காணப்படும். இன்று உற்சாகமாக இருக்க வேண்டியது அவசியம்.

உங்கள் பணிகளை முறையாக செய்ய வேண்டும். பணிச்சுமை காரணமாக இன்று பணியில் தவறுகள் நேரலாம்.

பாதுகாப்பற்ற உணர்வின் காரணமாக உங்கள் துணையிடம் தேவையற்ற வார்த்தைகளை பேசுவீர் கள். இதனை தவிர்த்தல் வேண்டும். பக்குவமான அணுகுமுறையோடு அன்பாக பழக வேண்டும்.

இன்று பணப்பற்றாக்குறை காணப்படும். உங்கள் உடனடித் தேவைகளை சமாளிப்பதை கடினமாக உணர்வீர்கள்.

## கன்னி



இன்றைய நாள் வரவேற்கத்தக்கதாக இருக்காது. சில சமயங்களில் பொறுமை இழப்பீர்கள். உணர்ச்சி வசப்படுவீர்கள். அந்தச் சமயங்களில் முக்கிய முடிவுகள் எடுப்பதை தவிர்க்கவும். எந்த விஷ யத்தையும் லேசாக எடுத்துக் கொள்வது நல்லது.

உங்கள் செயல்திறனில் நம்பிக்கையோடு காணப்படு வீர்கள். உங்களின் பணியாற்றும் முறை உங்கள் மேலதிகாரிகளால் பாராட்டப்படும்.

உங்கள் துணையுடன் மகிழ்ச்சியான தருணங்களை பகிர்ந்துகொள்ளும் வாய்ப்பு உள்ளது. பரஸ்பர அன்பு காணப்படும்.

இன்று பணபுழக்கம் அதிகமாக காணப்படும். பயனுள்ள வகையில் சேமிப்பீர்கள். இது உங்களுக்கு திருப்தியை அளிக்கும்.

## துலாம்



இன்றைய நாள் உங்களுக்கு சாதகமாக அமையும்.புதிய தொடர்பு களை ஏற்படுத்திக்கொள்வீர்கள். இது உங்களுக்கு பயனுள்ளதாக இருக்கும். இன்று உங்கள் விருப்பம் நிறைவேறும் நாள்.

உங்கள் சக பணியாளர்கள் ஆதரவாகவும் உதவி கரமாகவும் இருப்பார்கள். புதிய வேலைக்கான வாய்ப்பு உள்ளது. பயணங்கள் ஏற்படலாம்.

உங்கள் சமயோசித புத்தி காரணமாக உங்கள் துணையிடம் நல்லுறவு கொண்டிருப்பீர்கள். உங்கள் துணையுடன் வெளியிடங்களுக்கு சென்று வருவீர் கள்.

உங்கள் கடின உழைப்பின் மூலமாக ஊக்கத்தொகை மற்றும் சலுகைகள் வகையில் பண வரவு காணப்படும். உங்கள் மேலதிகாரிகளின் பாராட்டு கிடைக்கும்.

## விருச்சிகம்



இன்று பலன்கள் தாமதமாக கிடைக் கும் சூழ்நிலை காணப்படுகின்றது. இன்று அவ்வளவு சிறப்பான நாளாக அமையாது. இன்று எதையும் எதிர் பார்க்காதீர்கள்.

இன்று பணிகள் அதிகமாக காணப் படும்.இதுஉங்களுக்குகவலைஅளிக்கும். உங்கள் பணியாற்றும் முறையை திட்டமிட்டு செயலாற்றுங் கள்.

சமநிலையும் நகைச்சுவை அணுகுமுறையும் உங் கள் துணையை நன்கு புரிந்து கொள்ள உதவும். உங் கள் பிரியமானவரிடம் பேசும் போது கவனமாகப் பேச வும்.

நிதி வளர்ச்சி இன்று மகிழ்ச்சிகரமானதாக காணப் படாது. கூடுதல் செலவினங்கள் ஏற்படலாம்.

உங்கள தாயின் சிறிய உடல் நலப் பிரச்சினை ஒன் றிற்காக பணம் செலவு செய்ய நேரும்.

# இன்றைய ராசி பலன்கள் - 26.01.2024


தனுசு

ஆன்மீக நாட்டம் வளர்ச்சியையும் ஆறுதலையும் தரும். இன்றைய நாளை சிறப்பானதாக ஆக்க புது வழிகள் காண்பீர்கள். அவசர முடிவுகள் எதையும் எடுக்காதீர்கள். அதனால் எந்தப் பயனும் கிடைக்காது.

உங்கள் அன்றாட பணிகளை கவனமுடன் செய்ய வேண்டும். பணியில் தவறுகள் ஏற்பட வாய்ப்பு உள்ளது.

உங்கள் துணையிடம் அகந்தையின்றி பழக வேண்டும். உங்கள் உணர்வுகளை உங்கள் துணையிடம் மனம் திறந்து கூற வேண்டும்.

இன்று நிதியில் ஏற்ற இறக்கங்கள் காணப்படும். இன்று காணப்படும் பணப்பற்றாக்குறை உங்களுக்கு கவலையை அளிக்கும்.


கும்பம்

இன்று ஆன்மீக அணுகுமுறையை நீங்கள் பற்றிக்கொள்வீர்கள். உங்கள் தன்னம்பிக்கையால் சாதனை புரிவீர்கள். இன்று அதிர்ஷ்டத்தை அனுபவிக்கும் நாள். மகிழ்ச்சியாக இருப்பீர்கள்.

இன்று பணிகளை அமைதியாக மேற்கொள்வீர்கள். உங்களின் இந்த அணுகுமுறை உங்களுக்கு வெற்றியை பெற்றுத் தரும்.

உங்களின் அனுசரணையான போக்கு உங்கள் துணையை மகிழ்விக்கும். எனவே இன்றைய நாள் இனிமையாக இருக்கும். உறவில் திருப்தி நிலவும்.

இன்று பண வளர்ச்சி சிறப்பாக காணப்படும். சலுகை அல்லது ஊக்கத்தொகையாக இன்று பணம் கிடைக்கும். இது உங்களுக்கு திருப்தியை அளிக்கும்.

நீங்கள் சிறந்த ஆற்றலுடன் காணப்படுவீர்கள். உங்கள் ஆரோக்கியம் சிறந்து விளங்கும்.


மகரம்


இன்று சிறப்பான நாள். இன்று சுறு சுறுப்புடனும் மும்மரமாகவும் காணப்படுவீர்கள். இன்று நற்பலன்கள் கிடைக்கும்.

பணியிடத்தில் புதிய வாய்ப்புகள் உங்களுக்கு மகிழ்ச்சியை அளிக்கும். பணியில் நற்பெயர் கிடைக்கும்.

உங்கள் துணையுடன் அமைதி பராமரிப்பீர்கள். இதனால் உங்கள் துணையுடனான உறவில் நல்லிணக்கம் காணப்படும்.

இன்று நிதிவளர்ச்சி சீராக காணப்படும். நீங்கள் கணிசமான தொகை சேமிப்பீர்கள்.

இன்று ஆரோக்கிய பிரச்சினை ஏதும் காணப்படாது. சிறந்த ஆற்றலுடன் காணப்படுவீர்கள்.


மீனம்

நீங்கள் விரும்பும் பலன்கள் கிடைக்கும் அளவிற்கு இன்றைய தினம் சாதகமாக இருக்காது. மனக்குழப் பத்திற்கு ஆளாக நேரலாம். பதட்டப்படாமல் இன்றைய பணிகளை திட்டமிடுங்கள்.

இன்று பணிச்சுமை அதிகமாக காணப்படும். உங்கள் பணிகளை திட்டமிட வேண்டும். இன்று திட்டமிட்டு பணிகளை மேற்கொள்வது மிகவும் அவசியம்.

இன்று உங்கள் துனையிடம் உணர்ச்சி வசப்படுவீர்கள். இதனால் கருத்து வேறுபாடு ஏற்படும். எனவே நட்பான அணுகுமுறை தேவை.

பயணத்தின் போது பண இழப்புகள் ஏற்படலாம். எனவே பணத்தை கவனமாகக் கையாள வேண்டும்.

இன்று ஆரோக்கியம் குறைந்து காணப்படுவீர்கள். ஜீரணம் சம்பத்தப்பட்ட பிரச்சினைகள் காணப்படும்.



Discover the Ultimate Investment & Dynamic Destinations which Redefines the Face of Luxurious Living

OUR ONGOING PROJECTS
No.06, 19th Lane, Colombo 03.
No. 15A, Layards Rd, Colombo 04.
No.30, Hotel Road, Mount Lavinia.
No. 02, Glenfall Road, Nuwara Eliya.
No.01, Havelock Place, Colombo 05.
No. 34/2, De Saram Road, Mount Lavinia.
No. 358, High Level Road, Nugegoda.
No. 35, Ramakrishna Road, Colombo 06.



Blue Ocean GROUP OF COMPANIES
KELSEY HOMES 40 Years Housing Excellence
+94 777 546 546 | +94 770 774 774
LARGEST PROPERTY DEVELOPER IN SRI LANKA
No. 9A, De Fonseka Place, Colombo 04, Sri Lanka.

Northern PC Park
வடக்கின் கணினிப்பூங்கா



கணினி உலகில் நம்பகமான சேவையில் 15 வருடங்களுக்கு மேலாக யாழ் மண்ணில்
#10 Muddaskadai Junction, Stanley Road, Jaffna.
info@pcpark.co www.pcpark.co
Hot Line :- 077 777 1545
077 757 0124 | 075 555 7327 | 021 567 5566 | 021 222 9581
077 336 6443 | 071 777 2377 | 021 222 2050 | 021 222 0388
Northern Pc Park Npcpark northernpcpark Northern PC Park

# இலங்கையில் விவசாய செய்கைக்கு புதிய மாதுளை வகைகள் அறிமுகம்





இலங்கையில் விவசாய செய்கைக்கு ஏற்ற இரண்டு புதிய மாதுளை வகை களை விவசாய திணைக்களம் அறி முகப்படுத்தியுள்ளது.

விவசாய திணைக்களத்தின் ஹோமாகம தாவர வைரஸ் அடையாள நிலையம் முன்னெடுத்த ஆய்வுக ளின் அடிப்படையில், மேற்படி இரண்டு புதிய வகை மாதுளைகளும் அறி முகப்படுத்தப்பட்டுள்ளன.

மாலி பிங்க், லங்கா ரெட் என பெய ரிடப்பட்டுள்ள இந்த இரண்டு புதிய மாதுளை வகைகளையும், வெளிநாட் டில் இருந்து இறக்குமதி செய்யப்படும் சிவப்பு நிற மாதுளைகளுக்கு மாற்றீ டாக பயன்படுத்த முடியும் என தெரி விக்கப்பட்டுள்ளது.

இதன்மூலம், மாதுளைகளுக் கான இறக்குமதி செலவினத்தைக் கட்டுப்படுத்த முடியும் என விவசாய அமைச்சு தெரிவித்துள்ளது.

30 வருட ஆயுள் காலத்தை கொண்ட இந்த புதிய வகை மாதுளை மரத்தில் இருந்து வருடாந்தம் 20 முதல் 25 கிலோகிராம் வரையில் மாதுளை செய்கையை மேற்கொள்ள முடியும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஒரு ஏக்கருக்கு 400 மரங்களை நடுவதால் வருடாந்தம் 8 மில்லியன் ரூபாவை வருமானமாகப் பெறமுடியும் என விவசாயத் திணைக்களம் குறிப் பிட்டுள்ளது.

## பிரதி பொலிஸ்மா அதிபர்கள் மூவருக்கு உடன் இடமாற்றம்

பிரதி பொலிஸ்மா அதிபர்கள் மூவருக்கு உடனடி இடமாற்றம் வழங்கப்பட்டுள்ளது.

தேசிய பொலிஸ் ஆணைக்குழுவின் அனுமதியுடன் இந்த இடமாற்றம் வழங் கப்பட்டுள்ளது.

பிரதி பொலிஸ்மா அதிபர் கே.கட்டு பிட்டிய, போக்குவரத்து மற்றும் சமிக்ஞை பிரிவிற்கு பொறுப்பான பிரதி பொலிஸ்மா அதிபர் பதவியிலிருந்து மேல் மாகாணத் தின் வடக்கு பிராந்தியத்திற்கு பொறுப்பான பிரதி பொலிஸ்மா அதிபராக இடமாற்றப் பட்டுள்ளார்.

யாழ்.பிராந்தியத்திற்கு பொறுப்பாகவி ருந்த பிரதி பொலிஸ்மா அதிபர் எம். ஆர்.எம்.செனரத், போக்குவரத்து மற்றும் சமிக்ஞை பிரிவிற்கு இடமாற்றப்பட்டுள்ளார்.

குற்றப்பிரிவிற்கு பொறுப்பாகவிருந்த பிரதி பொலிஸ்மா அதிபர் ஜே.ஏ.கே.ஜய சிங்க, யாழ்.பிராந்தியத்திற்கு பொறுப்பான பிரதி பொலிஸ்மா அதிபராக இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார்.

### பெலியத்தையில் ஐவர் கொலை:

## சந்தேக நபரைத் தடுத்து வைத்து விசாரணை செய்வதற்கு அனுமதி



பெலியத்தையில் ஐவர் கொலை செய்யப்பட்ட சம்பவம் தொடர்பில் கைது செய்யப்பட்ட சந்தேக நபரைத் தடுத்து வைத்து விசாரிக்க நீதிமன்றம் நேற்று அனுமதி வழங்கியுள்ளது.

மேற்படி சந்தேக நபர் நேற்று தெய்யந்தர நீதிவான் முன்னிலையில் ஆஜர் படுத்தப்பட்டபோது சந்தேக நபரை எதிர்வரும் 27ஆம் திகதி வரை விளக்கமறி யலில் வைக்குமாறும் உத்தரவு பிறப்பிக்கப்பட்டது.

அக்குரஸ்ஸ, பங்கம பிரதேசத்தில் வைத்து நேற்று முன்தினம் கைது செய்யப்பட்ட சந்தேக நபரிடம் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளின் போது மேலும் பல முக்கிய தகவல்கள் வெளியாகியுள்ளன.

அந்த நபரே இந்தத் தாக்குதலுக்கு மூளையாகச் செயற்பட்டவர் என சந் தேகிக்கும் நிலைமை ஏற்பட்டுள்ளது எனப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.